janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 2023 ஜூலை 30 - ஆக 05 விலை: ரூ.15 16 பக்கங்கள் இதழ் 17




# மணிப்பூர் பாஜக அரசே பதவி விலகு!

# பாஜகவின் பிடியிலிருந்து நாட்டை விடுவிப்போம்!



## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா முழக்கம்!

**மணிப்பூரில் நிகழ்ந்து வரும் வன்முறை படுகொலைகளுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு கடும் கண்டனம் தெரிவித்தது. மேலும் பாஜக மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் நிலைமையை மோசமாக்கி உள்ளதாக குற்றம்சாட்டியது.**

மேலும் ஜூலை 25ஆம் தேதி அன்று மணிப்பூர் ஒருமைப்பாட்டு நாள் இந்தியா முழுவதும் கடைபிடிக்கப்படும் என அறிவித்தது. இதனையொட்டி நாடு முழுவதும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டங்களில் ஈடுபட்டது. சென்னை தங்கசாலை மணிக்கூண்டு அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா கலந்துகொண்டார். அப்போது, நாடாளுமன்றம் செயல்படாமல் முடங்கி இருப்பதற்கு ஆளும் பாஜகவே காரணம் என்று குற்றம்சாட்டினார். இந்த ஆர்ப்பாட்டத்திலும் அதற்கு முன்னதாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலும் டி.ராஜா ஆற்றிய உரை வருமாறு:



நாடாளுமன்றம் கொந்தளிப்பான சூழலில் இருக்கிறது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கொந்தளிப்பு மேலோங்கி இருக்கிறது. நாடாளுமன்றம் முடங்கி இருப்பதற்கு பிரதமரும் ஆளுகின்ற பாரதிய ஜனதா கட்சியும்தான் காரணம். நாடாளுமன்றம் செயல்படுவதற்கு அரசாங்கமும் ஆளும் கட்சியும் முன்னே நிற்க வேண்டும். ஆனால், நாடாளுமன்றத்தை முடக்குவதற்கான வகையில் அவை இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

டாக்டர் அம்பேத்கர் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தை ஏற்றுக்கொண்டு, ஜனநாயக குடியரசாக தன்னுடைய பயணத்தை இந்தியா தொடங்கியது. அன்று முதல் நம்முடைய ஜனநாயகத்தின் உயர்ந்த அமைப்பாக நாடாளுமன்றம் கருதப்பட்டு வருகிறது. ஆனால், இன்றைக்கு நாடாளுமன்றம் முடக்கப்படுகிறது. சென்ற கூட்டத்தொடரிலும் நாடாளுமன்றம் முடக்கப்பட்டது. கார்ப்பரேட் கொள்ளை குறித்து விவாதிக்க வேண்டும். அதானி குழுமத்தின் பொருளாதார நடவடிக்கைகள் குறித்தும், அந்த குழுமத்திற்கு அரசு கொடுத்து வரும் ஆதரவு குறித்தும் விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஆளும்கட்சி அதனை ஏற்க மறுத்து நாடாளுமன்றத்தை செயல்பட அனுமதிக்கவில்லை.



இப்பொழுது நாடாளுமன்றத்தில் கேட்பது எல்லாம் மணிப்பூர் குறித்து விவாதிக்க வேண்டும் என்பதுதான். பிரதமர் மோடி நாடாளுமன்றத்திற்கு வரவேண்டும். மணிப்பூர் பிரச்சனையில் அரசினுடைய நிலைப்பாட்டை அவர் விளக்க வேண்டும். அறிக்கை அளிக்க வேண்டும். அதன் மீது ஆழமான, அர்த்தப்பூர்வமான விவாதம் நடத்தப்பட வேண்டும். இதைத்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உட்பட அத்தனை கட்சிகளும் வலியுறுத்துகின்றன. இதனை ஆளுங்கட்சியான பாஜகவும், பிரதமர் மோடியும் இன்னும் ஏற்கவில்லை. நாடாளுமன்றம் தொடர்ந்து முடக்கப்பட்டு வருகிறது.

வரலாற்று பூர்வமான கேலிக்கூத்து ஒன்றை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். திரு.மோடி அவர்கள் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்துக்குள் முதன்முதலாக நுழையும் போது, நாடாளுமன்றத்தின் வாயிலில் உள்ள படிக்கட்டுகளை தொட்டு வணங்கி தான் நாடாளுமன்றத்திற்குள் சென்றார். நாடாளுமன்றம் ஜனநாயகத்தின் கோவில் என்றும், இந்தியா ஜனநாயகத்தின் தாய் என்றும் தொடர்ந்து பேசி வருகிறார். இது உண்மையானால், இன்றைக்கு நாடாளுமன்றம் செயல்படாத நிலையை உருவாக்கியது யார்? என்ன காரணம்?

நாடாளுமன்றம் முடக்கப்பட்டால், ஜனநாயகம் செயல்படாமல் உயிர் இழக்கிறது. இதைத்தான் பாரதிய ஜனதா கட்சிக்கு எதிராக போராடும் அரசியல் கட்சிகள் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி வருகின்றன.

எங்கெல்லாம் வலதுசாரி பாசிச சக்திகள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுகிறார்களோ, அங்கெல்லாம் அவர்களின் முதல் தாக்குதல் நாடாளுமன்றமாகத்தான் இருக்கிறது. ஜெர்மனியில் ஹிட்லர் நாடாளுமன்றத்தின் மூலம் தான் ஆட்சிக்கு வந்தார். ஆட்சிக்கு வந்தவுடன் அவர் எடுத்த முதல் நடவடிக்கை, ஜெர்மன் நாடாளுமன்றத்தை குறிவைத்து செயலிழக்க செய்ததுதான். இதுதான் இந்தியாவிலும் நடைபெறுகிறது.

நாடாளுமன்றத்தில் மணிப்பூர் பிரச்சனையை விவாதிக்க வேண்டும் என ஏன் வலியுறுத்துகிறோம்? மணிப்பூர் இன்றைக்கு பெரும் நெருக்கடியில் இருக்கிறது. கலவர பூமியாக மாறி இருக்கிறது. சில அறிஞர்கள் குறிப்பிடுவது போன்று மணிப்பூரில் குடிமை சமுகப் போர் (civil war) நடக்கும் சூழல் உருவாகி இருக்கிறது.

மணிப்பூரில் மெய்தி சமூகப் பிரிவு இருக்கிறது. குக்கி பழங்குடிகள் இருக்கின்றனர். நாகா பழங்குடி மக்கள் இருக்கின்றனர். கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுபவர்கள் இருக்கின்றனர். இஸ்லாமியர்கள் இருக்கின்றனர். இப்படி பல்வேறு சமூகப் பகுதியினர் வாழ்ந்து வரும் ஒரு மாநிலம்தான் மணிப்பூர். இந்தியாவின் எல்லை மாநிலமாக, முக்கியமான மாநிலமாக மணிப்பூர் இருக்கிறது. இங்கு அமைதி குலைந்ததற்கு யார் காரணம்?

இரட்டை எஞ்சின் அரசாங்கம் என்று பிரதமர் மோடி அடிக்கடி கூறுகிறார். இரட்டை எஞ்சின் அரசு அமைந்தால் நாடு முன்னேறும், வளர்ச்சி பெறும் என்றெல்லாம் திரு.மோடி பீற்றிக்கொண்டு வருகிறார். மணிப்பூரிலும், ஒன்றிய அரசிலும் பாஜக தான் இருக்கிறது. இப்படி இரட்டை எஞ்சின் ஆட்சி இருந்தும் என்ன நடந்திருக்கிறது? மணிப்பூர் நிலைமைக்கு பாஜகவை குற்றம் சொல்லாமல் யாரை குற்றம் சொல்வது? இவர்கள் பின்பற்றும் அரசியல் கொடூரமான பிரித்தாளும் அரசியலாகும்.

மணிப்பூரில் மே மூன்றாம் தேதி கலவரம் தொடங்கியது. மே ஐந்தாம் தேதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அறிக்கை கொடுத்துள்ளோம். மணிப்பூர் கலவரத்துக்கு அடிப்படை காரணமே மக்களைப் பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் தேடுவது தான். முதலமைச்சர் பைரேன் சிங் அரசு செயலிழந்து போயிருக்கிறது. இன்றைய சூழலை எதிர்கொள்வதற்கான திராணியற்றவராக முதலமைச்சர் பைரேன் சிங் இருக்கிறார். அவரே பதவி விலக வேண்டும்; இல்லாவிட்டால் அவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட மணிப்பூரில் உள்ள 10 கட்சிகள் வலியுறுத்தி உள்ளன. மணிப்பூர் மக்களிடையே நல்லிணக்கம் உருவாக வேண்டும், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட

தொடர்ச்சி 3ம் பக்கம்

கட்சிக் கடிதம்

# இன்றைய இந்தியா - 4



போர்க்குணமிக்க தோழர்களே!

**வைகைப் புயல் வடிவேலு கதாநாயகனாக நடித்த இம்சை அரசன் 23ஆம் புலிகேசி திரைப்படத்தை பார்த்திருப்பீர்கள். வடிவேலு அரசனாக நடிக்கும் இப்படத்தில் அரண்மனை காவலர்களையும் மற்ற ஊழியர்களையும் படை வீரர்களையும் ஏன் புலவரைக்கூட படாதபாடு படுத்துவார்.**

இரு பிரிவு மக்களிடையே தங்களில் யார் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என வேறுபாடுகள் ஏற்பட்டு, மன்னரிடத்தில் தங்களது குறைகளை எடுத்துக் கூறி, நியாயத் தீர்ப்பிற்காக இரு பிரிவினரும் முறையீடு செய்வார்கள். அரசரோ அவர்களில் யார் உயர்ந்தவர், பலசாலி என்பதனை அறிய இருதரப்பையும் மோதவிடச் செய்வார். இரு தரப்பினரும் ஒருவரோடு ஒருவர் மோதி, சண்டையிட்டு, அடிபட்டு, மிதிபட்டு சாவார்கள்.

இம்சை அரசனான புலிகேசி சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டு, மக்கள் அடிபட்டுச் சாவதை ரசித்து மகிழ்வார்.

திரைப்படத்தில் நகைச்சுவையாக சொல்லப்பட்ட கதை இன்று நிஜமாகி விட்டது. எல்லையோர மாநிலங்களில் ஒன்றான அழகான பெயரைக் கொண்ட மணிப்பூர் மாநிலத்தில் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதல் தொடங்கியது மே மூன்றாம் நாள்.

இக்கடிதம் எழுதுகின்ற நாளில் மோதல் தொடங்கி 82 நாட்களாகி விட்டன. அங்கே நடந்து கொண்டிருக்கின்ற ஆட்சி மோடி விரும்புகின்ற இரட்டை எஞ்சின் ஆட்சி.

இரட்டை எஞ்சினைக் கொண்டு நடைபெறுகின்ற ஆட்சியில் மோதல் தொடங்கியவுடன் சமாதான கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, இருதரப்பினரையும் அழைத்துப் பேசி சுமுகத் தீர்வு கண்டிருக்க வேண்டும். இரட்டை எஞ்சினைக் கொண்ட ஆட்சி இதனை செய்திருந்தால் வீடுகள், வணிக வளாகங்கள், குடோன்கள் தீக்கிரையாகி இருக்குமா?

காவல் நிலையங்களில் இருந்த துப்பாக்கிகள் பறிபோய் இருக்குமா? தலைகள் துண்டிக்கப்பட்டு, உடையவர் வீட்டு வேலியில் தலை சொருகப்பட்டு இருக்குமா? ஏறத்தாழ 200 எண்ணிக்கையை தொட்டுவிட்ட விலைமதிக்கவொண்ணா மனித உயிர்கள் பறிபோய் இருக்குமா?

எல்லாவற்றிற்கும் மேலாக வயது வந்த நம்முடைய தங்கைகளை முழு நிர்வாணமாக்கி, அம்மணமாக நட்ட நடு வீதியில், ஊர்வலமாக கொடியவர்கள் கதறக் கதற இழுத்துச் சென்று இருப்பார்களா?



வெறிபிடித்த நாய்கள் கடித்துக் குதறி சின்னா பின்னமாக்குவது போன்று, பெண்களை வெறிபிடித்த கும்பல் சின்ன பின்னமாக்கியதுடன் கொலை செய்து இருப்பார்களா? தடுக்க வந்த தந்தையை, சகோதரனை கொலை செய்து இருப்பார்களா? இரண்டு குழந்தைகளுக்குத் தாயானவரை, தன் கண்முன்னால் கணவரையும் மகனையும் கொலை செய்தது மட்டுமின்றி, அப்பெண்ணையும் சூறையாடி இருப்பார்களா?

இத்தனை கொடிய, கொடூர சம்பவங்கள் நடந்த போதும், பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லையே ஏன்? யாருடைய உத்தரவின் பேரில் காவல்துறை கைகட்டி வாய் பொத்தி வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தது? 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் படுகாயமுற்று குற்றுயிரும் கொலை உயிருமாக மருத்துவமனைகளில் உயிருக்கு மன்றாடி மடிந்து கொண்டு உள்ளார்களே! 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் சொந்த நாட்டில் அகதிகளைப் போன்று அல்லல் பட்டு வருகின்றார்களே! இவை அனைத்தையும் பார்த்துப் பார்த்து இம்சை அரசர் (மோடி) கைதட்டி ஆரவாரம் செய்து அகமகிழ்ந்து புன்னகை பூக்கின்றார்.



பெண்கள் சூறையாடப்பட்ட சம்பவங்கள் நடந்து 77 நாட்களுக்குப் பின்னர், சமூக ஊடகங்கள் மூலம் வெளி உலகத்திற்குத் தெரிய வருகின்றது. இந்திய நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலகமே காரி உமிழ்ந்தது.

உச்சநீதிமன்றம் தலையிட்டு உடனடியாக இரட்டை எஞ்சின் ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், உச்சநீதிமன்றமே நேரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என உரத்து எச்சரித்த பின்னர், இம்சை அரசர் நாடாளுமன்றத்திற்கு வெளியே தொலைக்காட்சிக்கு சில நொடிகள் பேட்டி அளிக்க தன் உதடுகளைத் திறந்தார்.

அம்மாநிலத்தின் முதலமைச்சரோ இவை போன்று நிறைய சம்பவங்கள் உண்டு, அவை.வெளியில் வரவில்லை என்று இறுமாப்போடு கூறுகின்றார். திரைப்படத்தில் வரும் இம்சை அரசருக்கும் இரட்டை எஞ்சின்களுக்கும் என்ன வித்தியாசம்?

இதுதான் தோழர்களே, இன்றைய இந்தியா!

நாடாளுமன்றம் ஜூலை 20ஆம் நாள் கூடியது. எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து மணிப்பூரில் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டுள்ள படுபயங்கரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோருகின்றன.

நாடாளுமன்றம், சட்டமன்றங்கள் எதற்காக? மக்கள் பிரச்சனைகளை விவாதிக்கவும் தீர்வு காணவும் தானே!

மூன்று மாத காலமாக நாட்டில் துண்டிக்கப்பட்ட மாநிலமாக மணிப்பூர் உள்ளது. நாட்டின் பிரதமர் நாடாளுமன்றத்திற்கு வர வேண்டாமா? மணிப்பூர் படுகொலைகள், தீவைப்பு, கற்பழிப்புகள் குறித்து அறிக்கை வைத்திடல் வேண்டாமா? எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதமர் முன்வைக்கும் அறிக்கையின் மீது தங்களின் கருத்துக்களை தெரிவித்து, விவாதிக்க வாய்ப்பளித்திடல் வேண்டாமா?

நாடாளுமன்றப் படிக்கட்டுகளை தொட்டு வணங்கி மரியாதை செலுத்தி, சபைக்குச் சென்ற மாமன்னர், சபையை மதித்து இன்று பதில் சொல்ல மறுப்பது ஏன்? ஏன்?

நம்பிக்கையிழந்து அவநம்பிக்கையுடன், தங்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பு, உடமைக்குப் பாதுகாப்பு, யாரை நம்பி வாழ்வது என்ற நிலையில் உள்ள மணிப்பூர் மக்களுக்கு பாதுகாப்பு அளித்து நம்பிக்கையூட்ட வேண்டாமா?

இதனை எல்லாம் செய்ய மறந்தல்ல, மறுத்துவிட்ட மோடியின் உருவப் பொம்மையை ஆங்காங்கே பெண்கள் தீயிட்டு கொளுத்துவதில் என்ன தவறு இருக்க முடியும்?

சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு வகிக்கும் உள்துறை அமைச்சர் கோயபல்சை (அமித்ஷா) ராஜினாமா செய் என்று மக்கள் கோருவதில் என்ன தவறு?

மணிப்பூரை ஆளத் தகுதியற்ற அம்மாநில அரசை கலைத்து, அங்கு குடியரசுத் தலைவரின் ஆட்சியை அமல்படுத்தி, மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி அமைதியை நிலை நாட்ட வேண்டும் என்று மக்கள் கூறுவதை தவறு என்று கூற முடியுமா?

சர்வாதிகாரிகள் பாசிஸ்ட்டுகள் எப்போதும் ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்றியது இல்லை. சட்டத்திற்கு உட்பட்டும் செயல்பட மாட்டார்கள். மனித உயிர்கள் பலியாவதைக் கண்டு கலங்கிட மாட்டார்கள்.

அவர்களுக்கு என்று ஒரு நோக்கம் இருக்கும். அந்த நோக்கம் என்பது பொது நலன் சார்ந்தது அல்ல, மாறாக குறுகிய நோக்கமுடையதாகவே இருக்கும்.

இன்று ஒன்றியத்தில் ஆட்சி அதிகாரத்தில் உள்ள கட்சி ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் அரசியல் பிரிவான பாஜக. தனது எஜமானரின் உத்தரவுகளை நிறைவேற்றக்கூடிய ஆட்சி இது. கொடுங்கோலர்கள் ஆட்சியில் நியாயங்கள் தர்மங்கள் ஒருபோதும் ஏற்கப்பட மாட்டாது

“இம் என்றால் சிறைவாசம்; ஏன் என்றால் வனவாசம்“ என்று ஆட்சி புரிந்த, ரஷ்ய நாட்டை ஆண்ட ஜார் மன்னன் குறித்து நமது முண்டாசுக் கவிஞர் பாரதி, “ஆகா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி” என்ற பாடலில் கூறியிருப்பார்.

கொடுங்கோலன் ஜார் மன்னன் ஆட்சி அகற்றப்பட்டது போல் இங்கே உள்ள ஒன்றியத்தை ஆளும் கொடுங்கோலர்களின் ஆட்சி அகற்றப்பட வேண்டும்.

அகற்றப்பட ஒன்பது மாத காலம் காத்திருக்க வேண்டுமா என்ற கேள்வி எழுவது நியாயமே!

ஒன்பது மாத காலம் என்பது வெகு தொலைவில் இல்லை. கூப்பிடு தொலைவில் தான் உள்ளது.

இடைக்காலத்தைப் பயன்படுத்தி படை, பட்டாளத்தை பெருக்கிக் கொள்ள அரிய வாய்ப்பாக கருதி ஆயத்தப் பணிகள் அனைத்தையும் மேற்கொள்வோம்.

இம்சை அரசன் மோடியின் ஆட்சியை அகற்றுவோம்.

மீண்டும் சந்திப்போம்

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)

மாநிலச் செயலாளர்

# நாடே வெட்கி தலைகுனியும் சம்பவங்கள் குறித்து கவலை கொள்ளாத பிரதமர்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சாடல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர்இரா. முத்தரசன்விடுத்துள்ள அறிக்கையில்கூறியுள்ளதாவது.

நாடே வெட்கிதலைகுனியும்சம்பவங்கள் குறித்துகவலை கொள்ளா பிரதமர்

மணிப்பூர் மாநிலத்தில் கடந்த மே மாதம் 3ம் தேதி தொடங்கிய வன்முறை சம்பவங்கள் மூன்று மாதங்களாக தொடர்ந்துநடைபெற்றுவருகின்றன.

வீடுகள் வணிக நிறுவனங்கள், ஒன்றிய இணை அமைச்சரின் வீடு குடோன்கள் உட்பட அனைத்தும் தீவைத்து கொளுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தில் பல பகுதிகள் பற்றி எரிந்து வருகின்றது. போராட்டக்காரர்கள் காவல் நிலையங்களில் இருந்த துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை எடுத்துச் சென்று உள்ளனர். தொடரும் வன்முறையில் இதுவரை சுமார் 200 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.ஐந்தாயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்து, மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அரசின் நிவாரண முகாம்களில் ஐம்பதாயிரத்திற்கும் அதிகமானோர் தஞ்சம் அடைந்து, சொந்த நாட்டில் அகதிகளாக நிற்கிறார்கள்.இந்நிலையில் 19 வயதை எட்டாத சிறுமி உட்பட மூன்று பெண்களின் ஆடைகளைகளைந்து, நிர்வாணமாக இழுத்துச்சென்று அவமதிக்கப்பட்டு, மறைவிடத்துக்கு கொண்டு சென்று, வன்புணர்வு தாக்குதல் நடத்தி, சீரழித்து படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த இழி செயலால் நாடு வெட்கித் தலைகுனிந்து நிற்கிறது.

பெண்களின் கண்ணியத்தை காக்க முயன்ற பெண்ணின் சகோதரர் உட்பட இளைஞர்கள் வன்முறையாளர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட கொடும் நடந்திருப்பது அங்கு ஆட்சி நிர்வாகமும், சட்ட ஒழுங்கும் முற்றிலுமாக நிலைகுலைந்து போயிருப்பது நாட்டின் பார்வைக்கு வெளிப்பட்டுள்ளது. மூன்று மாதங்களாக மணிப்பூரில் நடந்து வரும் நிகழ்வுகள் உலக நாடுகளின் விவாதத்திற்கு ஆளாகி வருகின்றது. இந்த நிலையிலும் நாட்டின் பிரதமர் வாய்திறந்து பேசாமல் மௌனசாட்சியாகஇருப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

நாட்டின் உச்சநீதிமன்றம் தலையிட்ட பின்னரே பிரதமரின் உதடுகள்மெல்லதிறந்துமுணுமுணுப்பதுவரலாற்றுதுயரமாகும். உலக நாடுகளை சுற்றிவரும்பிரதமர், பாஜகவின் இரட்டைஎஞ்சின் ஆட்சிநடக்கும் மணிப்பூர்மாநிலத்தில்சட்டம்ஒழுங்கு முற்றாக கைவிட்டுப் போய், மக்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது பற்றி கிஞ்சிற்றும் கவலை கொள்ளாது, வாய்ச்சவாடல் முழங்கி வருவது வெட்கக் கேடானது. தொடர்வது மிகுந்த கவலைக்குரியது.மணிப்பூர் மாநிலத்தில் அமைதியை நிலைநாட்ட தவறிய நாட்டின் பிரதமர்மோடிநாட்டு மக்களிடம் நிபந்தனையற்ற முறையில் பகிரங்க மன்னிப்பு கோருவதுடன், அமைதியை நிலைநாட்டவும், பெண்களை சீரழித்த கயவர்கள் மீதுஉரியசட்ட நடவடிக்கைகள் எடுக்கவும் பாதிக்கப்பட்ட, பெண்கள் உட்பட அனைவருக்கும் உரிய நிவாரணம் வழங்கிட முன்வர வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.இவ்வாறுதனது அறிக்கையில்கூறியுள்ளார்.

0 ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டும், இதற்கு பாஜக முன்வரவில்லை.

திரு.அமித்ஷா மணிப்பூர் சென்றது உண்மை. அங்குள்ள அரசியல் கட்சிகளை சந்தித்தது உண்மை. ஆனால், அமித்ஷா அங்கிருந்து திரும்பி வந்த பிறகு என்ன செய்தார்? உருப்படியாக எதையாவது செய்து அரசியல் கட்சிகளிடமும் மக்களிடமும் நம்பிக்கையை ஏற்படுத்தினரா? இல்லை. அவர் என்ன நினைக்கிறார்? என்ன புரிந்து கொண்டிருக்கிறார்? என்பது தெரியாது. ஆனால் நாடாளுமன்றத்தில் அமித்ஷா தான் பேசுவார். பிரதமர் பேச மாட்டார் என பாஜக அடம்பிடிப்பது அடாவடித்தனமான, எதேச்சதிகாரமான அரசியல் ஆகும்.

மணிப்பூரில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் சொந்த மண்ணில் அகதிகளாக இருக்கின்றனர். பெண்கள், குழந்தைகள் சொல்ல முடியாத அளவுக்கு வன்கொடுமைகளுக்கும் மனவேதனைகளுக்கும் ஆளாகி இருக்கின்றனர். இவை பற்றி எல்லாம் பிரதமர் மோடி வாய் திறக்கவில்லை. ஒரு காணொளி வெளியான பிறகு தான் திரு.மோடி வாய் திறந்து இருக்கிறார். அப்பொழுதும் மணிப்பூராக இருந்தாலும் எந்த மாநிலமாக இருந்தாலும் சட்டம் தன்னுடைய பணியை செய்யும். வலுவான நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் கூறுகிறார். மணிப்பூர் பற்றி திரு.மோடியின் நிலைப்பாடு என்ன என்று கேட்டால், வாயைத் திறக்க மறுக்கிறார்.

பிரான்ஸ் நாட்டுக்கு பிரதமர் மோடி சென்றிருந்தார். அப்போது, ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதித்து தீர்மானம் நிறைவேற்றுகிறது. பிரான்ஸ் நாட்டில் பிரதமர் மோடி இருக்கும்போதே, ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றியது இந்தியாவுக்கு உலக அரங்கில் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு யார் காரணம்? மோடிதான் பொறுப்பேற்க வேண்டும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது புல்வாமா பிரச்சனை எழுந்தது. இந்த பிரச்சனையில் ஒன்றிய அரசு எத்தகைய தவறை இழைத்தது என்பதை காஷ்மீர் மாநில ஆளுநராக இருந்த சத்யபால் மாலிக் அம்பலப்படுத்தி இருக்கிறார். இதற்கான பதில் பிரதமர் மோடியிடமிருந்து இதுவரை வரவில்லை.

இன்றைக்கு, நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதால் மணிப்பூர் கலவரத்தை உருவாக்கி இருக்கிறார்கள். இதனால் மணிப்பூர் பிரச்சனை தேசியப் பிரச்சனையாக; மானுடப் பிரச்சனையாக மாறி இருக்கிறது. அங்கே பெண்கள் சந்திக்கும் வன்கொடுமைகளுக்கும்



பாலியல் பலாத்காரங்களுக்கும் மானுடமே ஆவேசப்படுகிறது. இதனை எந்த நாட்டில், யார் கேள்விப்பட்டாலும் கோபம் ஏற்படுகிறது. இதை விவாதிப்பதற்கு பிரதமர் மோடி தயாராக இல்லை.

மணிப்பூர் மாநிலத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற குழு ஒன்றை அனுப்பி வைத்தது. அதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர்கள் பினாய் விஸ்வம், சந்தோஷ் குமார், மக்களவை உறுப்பினர் கே.சுப்பராயன் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த இரண்டு மாநிலங்களவை உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். இந்தக் குழுவினர் மணிப்பூரின் கள நிலவரத்தை நேரடியாக கண்டறிந்து வந்துள்ளனர். நாடாளுமன்றத்தில் இது பற்றிப் பேச வேண்டும், உண்மைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் எனக் கேட்டனர். அதற்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் ஆனிராஜா, தேசியச் செயலாளர் நிஷா சித்து, உச்சநீதிமன்ற வழக்கறிஞர் தீக்ஷா திவேதி ஆகியோர் அடங்கிய உண்மை அறியும் குழு மணிப்பூர் சென்று, பல்வேறு பகுதிகளில் மக்களையும் முகாம்களையும் பார்வையிட்டனர். அங்கேயே செய்தியாளர்களை சந்தித்து நேரில் கண்ட உண்மைகளை எடுத்துக் கூறினர். டெல்லி திரும்பியவுடன் அங்கும் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினர். மணிப்பூர் கலவரத்துக்கு இரட்டை எஞ்சின் அரசாங்கம் தான் காரணம். அது தோல்வி அடைந்துவிட்டது. மணிப்பூரில் நிகழ்ந்த வன்முறைகள் அரசின் துணையோடு தான் (State sponsored) நடத்தப்பட்டுள்ளன என்பதை எடுத்துக் கூறினர். இதைத்தான் இன்றைக்கு எல்லோரும் பேசுகின்றனர். மணிப்பூர் காவல்துறை அவர்கள் மீது பிணையில் வெளிவர முடியாத பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்திருக்கிறது. இந்த பொய் வழக்கை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. இது பற்றி நாடாளுமன்றத்தில் பேசுவதற்குக் கூட வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

மணிப்பூரின் மலைப்பகுதியில், வனப்பகுதியில் பல்வேறு கனிம வளங்கள் நிறைந்துள்ளன. இவற்றை அபகரிக்க வேண்டும்என சில கார்ப்பரேட் நிறுவனங்கள் முயற்சிக்கின்றன. அதில் அதானி பெயரும் இன்றைக்கு சொல்லப்படுகிறது. எனவே மலைவாழ் பழங்குடி மக்களின் இந்த நிலங்களைப் பறித்து கார்ப்பரேட் முதலாளிகளுக்கு தாரைவார்ப்பதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இது பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டால் உண்மை வெளியுலகுக்கு தெரிந்து விடும் என்பதால் பிரதமர் பேச மறுத்து வருகிறார்.

நரேந்திர மோடி பிரதமரான பின்னர் மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு வருகின்றன. கூட்டாட்சி நெறிமுறைகள் தகர்க்கப்படுகின்றன. இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியம் (Union of States) என்று தான் டாக்டர் அம்பேத்கர் குறிப்பிடுகிறார். ஆனால் மோடி பிரதமரான பிறகு, மாநிலங்களின் ஒன்றியம் (Union of States) என்பதை ஏற்கவில்லை. ஒரு நாடு; ஒரு கலாச்சாரம்; ஒரு மொழி என்று தொடங்கி, ஒரு நாடு; ஒரு வரி ஒரு நாடு; ஒரு தேர்தல் என்றாகி, ஒரு நாடு; ஒற்றைத் தன்மை கொண்ட நாடு என்பதாக இந்தியாவை மாற்ற விரும்புகின்றனர். இதற்குப் பொருள், மனுஸ்மிருதி அடிப்படையில் இந்து ராஷ்டிர அமைப்பை உருவாக்குவது தான் திரு.மோடி அவர்களின் அரசாங்கத்தின், அவர்களின் கட்சியின் நோக்கம் என்பதுதான்.

ஆர்எஸ்எஸ் அமைப்பின் கொள்கை இந்தியாவில் ஒற்றை பரிமாண ஆட்சியை, இந்து ராஷ்ட்ரா என்ற பெயரில் மனுஸ்மிருதி அடிப்படையில் அமைக்க வேண்டும் என்பது தான். அதற்கான நடவடிக்கைகளில் ஒன்றிய அரசாங்கம் ஈடுபட வேண்டும் என ஆர்.எஸ்.எஸ் விரும்புகிறது. இந்த ஆர்.எஸ். எஸ் அமைப்பின் கொள்கையைத்தான் பாஜக பின்பற்றுகிறது.

இதே பிரச்சனை அரசியல் நிர்ணய சபையில் விவாதத்திற்கு வந்திருக்கிறது. அப்போது டாக்டர் அம்பேத்கர், இந்தியா ஜனநாயக குடியரசாகத்தான் இருக்க வேண்டும், மதம் சார்ந்த நாடாக இருக்கக் கூடாது. இந்துராஷ்ட்ரா என்பது உண்மையாகி விட்டால் அதைவிட பேரிடர் இந்த நாட்டிற்கு இல்லை என்று கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட பேரிடரை ஆர்.எஸ்.எஸ்., பாஜகவால் தற்போது நாடு எதிர்கொண்டிருக்கிறது. இந்த பேரிடரில் இருந்து நாட்டை மீட்க வேண்டும். இதற்கு பாஜக தோற்கடிக்கப்பட வேண்டும். ஆர்.எஸ்.எஸ், பாஜக பிடியிலிருந்து இந்தியா மீட்கப்பட வேண்டும் என இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா உறுதிப்பட தெரிவித்தார்.

– வ.மணிமாறன்

## வினாடி - வினா

1 இலங்கையில் குடும்பம் குடும்பமாக தமிழர்கள் கொல்லப்பட்ட ‘கருப்பு ஜூலை’ எந்த ஆண்டு நிகழ்ந்தது?

2 ரஷ்ய புரட்சியின் வரலாற்றைப் பதிவு செய்யும் ‘உலகை குலுக்கிய 10 நாட்கள்’ நூலை எழுதியவர் யார்?

3 பொதுக்குளத்தில் தலித் மக்கள் தண்ணீர் எடுக்க அனுமதி மறுக்கப்பட்டதற்கு எதிரான ‘மகத் சத்யாகிரகம்‘ எப்பொழுது, யாரால் நடத்தப்பட்டது?



4 இந்தியாவின் முதல் நாடாளுமன்ற மக்களவை பொதுத்தேர்தல் எப்பொழுது நடைபெற்றது?

5 இந்தியாவில் ஏடிஎம் கார்டு களுக்கான கமுக்க குறியீட்டு எண் எத்தனை இலக்கங்களை கொண்டது?

6 ‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்’ என்ற புகழ்பெற்ற வாசகத்தை எழுதியவர் யார்?

விடைகள்
12 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 17

## மூடிய அறைக்குள் மோடியின் வீராவேசம்

குஜராத் மாநிலம் பெருவெள்ளத்தில் மிதக்கிறது. ஜுனாகட் மாவட்டம் பெரும் பாதிப்புக்கு ஆட்பட்டுள்ளது. ராஜ்கோட், நவ்சாரி, தெற்கு குஜராத், சௌராஷ்ட்ரா, கட்ச், ஜாம்நகர், துவாரகா, சூரத், வல்சத், வடோதரா என எங்கெங்கு காணினும் வெள்ளம்.

ஏராளமான கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டு இருக்கின்றன. கேஸ் சிலிண்டர்கள் சரஞ்சரமாய் மிதந்து செல்கின்றன. கார்கள் வெள்ளத்தில் மூழ்கி இழுத்துச் செல்லப் படுகின்றன. அகமதாபாத் விமான நிலையம் முழங்கால் அளவு தண்ணீருக்குள் மூங்கி இருக்கிறது. 12 நெடுஞ்சாலைகள் உட்பட 302 சாலைகள்மூடப்பட்டிருக்கின்றன. ஐந்து பேர் இறந்த தகவல் வெளியில் தெரிகிறது. நூற்றுக்கணக்கானோர் வீடு இழந்து தவிக்கிறார்கள்.

நமது பத்திரிகைகள் எல்லாம் ‘வெள்ளம் போன்ற நிலைமை’ என்று சாதுவாக எழுதுகின்றன. அரசைப் பற்றிய தமது எண்ணங்களை பகிரங்கமாக சொல்வதற்கு, அந்த மாநிலத்தில் வாழும் மக்களில் மூன்றில் ஒருவர் பயப்படுகிறார் என்று அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு கூறுகிறது.

பெருமழை பெய்து விட்டது, எனவே வெள்ளம் வந்துவிட்டது என்று சொல்வதற்கு ரத கஜ துரக பதாதிகள் கொண்ட மாபெரும் அரசாங்கம் தேவை இல்லை.

குஜராத்துக்கு வெள்ளம் ஒன்றும் புதிது அல்ல. அனேகமாக ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் வருகிறது. 2006 ஆம் ஆண்டின் பெருவெள்ளத்தின் போது நிறுவப்பட்ட நீதிபதி சுகுணா பட் ஆணையம், வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை பரிந்துரைத்தது.அது அலமாரியில் தூங்குகிறதே தவிர அமலாக்கப்படவில்லை.

மக்களின் உயிர் பற்றியோ உடைமைகள் பற்றியோ எந்த கவலையும் இல்லாத அலட்சியம் அமைச்சர்கள், அதிகாரிகள் இடையே நிலவுகிறது. வெள்ளம் செல்லும் வழியைத் தடுத்து சட்டவிரோத ஆக்கிரமிப்புகள் இருப்பதை அகற்றுவதற்கு அரசாங்கம் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

வளர்ச்சியின் சின்னமாக குஜராத் மாடல் சொல்லப்பட்டது. அதனால் மோடியை வளர்ச்சி நாயகன் என்று புகழ் பாடி, அவரை பிரதமராக அமர வைத்து தீர வேண்டும் என்று கார்ப்பரேட் சக்திகள் முழுமூச்சாக செயல்பட்டன.

ஆதாயம் இல்லாமல் கார்ப்பரேட் ஆற்றோடு போகாது. மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தை எல்லாம் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஊக்கத்தொகையாக தந்து அவர்களின் லாபத்தை பன்மடங்கு மோடி பெருக்கினார்.

இதனால் குஜராத் அரசுக்கு கல்வி உடல் நலம் சுற்றுச்சூழல் மக்களின் வேலை வாய்ப்பு ஆகியவற்றிற்கு செலவு செய்வதற்கு பணம் இல்லாத நிலை உருவானது.

குஜராத்தின் மொத்த வருவாயில் 2%க்கும் குறைவான தொகையே கல்விக்கு ஒதுக்கப்படுகிறது. சாதாரணமாக 5–6 சதவீத நிதி தேவை. இதனால் குஜராத் தொழிலாளர்கள் 45% படிப்பறிவு அற்றவர்களாக உள்ளனர். மருத்துவத்துக்காக ஒதுக்கப்படுவது வெறும் 0.8% மட்டுமே. 45% குழந்தைகள் ஊட்டச்சத்து இல்லாதவர்களாக இருக்கிறார்கள். மகப்பேறு மற்றும் சிசு மரணங்களின் விகிதம் அதிகரிக்கிறது.

சாலைகள், வாய்க்கால்கள், பாசன வசதிகள், உள்ளாட்சிகளுக்கான நிதி ஒதுக்கீடு அனைத்தும் மற்ற மாநிலங்களை விட குறைவாக இருக்கிறது. இதனால் வழக்கமாக பெய்யும் மழை நீரை சமாளிக்க நிதி செலவிடுவதில்லை.

மத்தியிலும் மாநிலத்திலும் இரட்டை ஒரே கட்சியின் ஆட்சி நடந்தால், அது இரட்டை எஞ்சின் போல ஆற்றல் மிக்கதாக இருக்கும் என்ற பேச்சுக்கு ஒன்றும் குறைவில்லை. மணிப்பூரில் மட்டுமல்ல, குஜராத்திலும் இரட்டை எஞ்சின் ஆட்சி தோற்றுக் கொண்டே தான் இருக்கிறது.

சென்ற ஆண்டு பாஜக ஆட்சி கட்டிய மோர்பி பாலம் அறுந்து விழுந்து 54 குழந்தைகள் உட்பட 135 பேர் இறந்தபோது, மோடி இது கடவுளின் செயல் என்றார். இவர்களது எல்லாம் மோசடிகளுக்கு எல்லாம் கடவுளையும் மதத்தையும் இழுத்து வந்து நிறுத்தி விடுவார்கள்.

வடகிழக்கு மாநிலங்கள் கலவரத்தில் எரிந்து கொண்டிருக்க, வடமேற்கு மாநிலங்கள் வெள்ளத்தில் தத்தளிக்க, நாடாளுமன்ற கூட்டத்துக்குள் நுழைய அஞ்சும் பிரதமர் மோடி, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தனிக் கூட்டம் நடத்தி இருக்கிறார்.

அதில் கிழக்கு இந்திய கம்பெனியையும், இந்திய தேசிய காங்கிரசையும் பிரிட்டிஷ்காரர்கள் தான் நிறுவினார்கள். தீவிரவாதிகள் கூட இந்திய முஹாஜிதீன்கள் என்றுதான் பெயர் வைத்திருக்கிறார்கள் என்றெல்லாம் காற்றில் வாள் வீசி இருக்கிறார். “இந்தியா” என்ற எதிர்க்கட்சிகளின் கூட்டணி அவரை அந்த அளவுக்கு அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

மத்தியிலும், மாநிலங்களிலும் மக்களுக்குத் தோல்வியைத்தான் மோடி அரசு தந்து கொண்டிருக்கிறது. மோடிக்கு, மக்கள் தோல்வியையே பரிசாகத் தருவார்கள்.

# வங்கிகள் தனியார் மயம் மக்கள் விரோதம்




சி.எச்.வெங்கடாசலம்

ஜூலை 19, நமது நாட்டில் தனியாருக்குச் சொந்தமான பெரிய வங்கிகள்,வெற்றிகரமாகத் தேசியமயமாக்கப்பட்டதன் 55வது ஆண்டு. இந்த நாள் கொண்டாட வேண்டிய ஒரு நாள்; ஏனெனில் வங்கிகள் தேசியமயத்தைச் சாதிப்பதற்கானபோராட்டங்களில் நாம் தியாகம் மிக்க பங்காற்றி யிருக்கிறோம்.

ஏஐபிஇஏ பேரியக்கத்தை நிறுவிய நமது முன்னோர்களின் கண்ணோட்டத்திற்கு நாம்நன்றி தெரிவிப்போம். தேசியமயக் கோரிக்கை 1946ல் நமது அமைப்பு நிறுவப்பட்ட நாள்முதலாக அதன் கருவிலேயே இருந்தது. அதன் பின்னர் 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஏஐபிஇஏ அதற்காகப் பரப்புரை செய்து, இயக்கங்கள் நடத்தி, கடுமையாகப்போராடி, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கோரிக்கையைச் சாதித்தது. அதனால்தான் இந்தச் சாதனையை நாம் கொண்டாடுகிறோம்!

இப்போராட்டத்தில் ஏஐபிஇஏ அமைப்பை ஊக்கப்படுத்தி வழிகாட்டியதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஏஐடியுசி ஆற்றிய பங்கை நினைவுகூர வேண்டும். எஸ்.ஏ.டாங்கே, பூபேஷ் குப்தா, எஸ்.எம்.பானர்ஜி, ஏ.கே.கோபாலன், என்.கே.கிருஷ்ணன், இந்திரஜித் குப்தா போன்ற பல தலைவர்கள் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாகப் பரப்புரை செய்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், ஏஐபிஇஏ பொதுச்செயலாளருமானபிரபாத்கர் இந்தக் கோரிக்கையை திரும்பத் திரும்ப எழுப்புவதிலும், வங்கிஊழியர்களின் மாபெரும் போராட்டத்தைக் கட்டமைத்து நடத்தியதிலும் முன்னணிப் பங்குவகித்தார்.



இப்போதும் வளர்ந்துவரும் இந்தியப் பொருளாதாரத்தை, மேம்பாடு மற்றும்வளர்ச்சியை உந்தித் தள்ளுவதில் வங்கித் துறை கேந்திரமான பங்கு வகிக்கிறது. வங்கிகள் தேசியமயமாக்கப்படுவதற்கு முன்பு அனைத்து வங்கிகளும் தனியாரிடம் இருந்ததாலும், முக்கிய தனியார் வங்கிகளைச் சொந்தமாகக் கொண்டிருந்த பெருமுதலாளிகள் தங்கள்லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்ததாலும் நாட்டின் தேவைகளைப் பற்றிஅவர்கள் கவலைப்படவில்லை.

தேவைப்படும் மக்கள் பிரிவுகளுக்கு வங்கிச் சேவை,குறிப்பாக வங்கிக் கடன் பெறுவது சுலபமாகஇல்லை. இவ்வாறு தனியார்வங்கிகள் முதலாளிகளுக்கும் தொழில் குழுமங்களுக்கும் வெறும்உண்டியல் கருவிகளாகமட்டும் இருந்தன. எனவேதான் வங்கிகளைத் தேசியமயமாக்க வேண்டும், அவற்றைப்பரந்துபட்ட அடிப்படையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்குத் துணையாகநிற்கச் செய்ய வேண்டும் என்ற தேசபக்த கோரிக்கை எழுந்தது.

இந்தக் கோரிக்கை சாதிக்கப்பட முடியாதது என்று பலராலும் கேலி பேசப்பட்டது,வேறு பலர் நம்பிக்கையற்று இருந்தனர். தொழில் குழுமங்கள், முதலாளிகள் மற்றும் வங்கிஉரிமையாளர்கள் சீற்றம் அடைந்தனர். அரசோ அக்கோரிக்கைபால் மகிழ்ச்சியாக இல்லை, எரிச்சல் கொண்டது. ஆனால் இந்தக் கோரிக்கைக்காகப் போராடுவதில் ஏஐபிஇஏ பேரியக்கம்உறுதியாக இருந்தது.

1964ல் நடைபெற்ற திருவனந்தபுரம் மாநாட்டிலிருந்து மாபெரும் போராட்டத்திற்கு ஏஐபிஇஏ அறைகூவல் விடுத்தது. பிரபாத் கர் மற்றும் எச்.எல்.பர்வானா தொடர்ச்சியானபோராட்டத்திற்கு வலிமையான அழைப்பு விடுத்தனர். வங்கி ஊழியர்கள் நாடு முழுவதும்வங்கிகள் தேசியமயக் கோரிக்கையை எழுப்பி போராட்ட அலையின் உச்சத்தில் இருந்தனர்.

கிராமப்புறங்களில் துன்பங்கள் அதிகரித்ததால் காங்கிரஸ் கட்சி மீது மக்கள் நம்பிக்கைஇழந்தனர். 1967ல் காங்கிரஸ் கட்சி பல மாநிலங்களில் ஆட்சி அதிகாரத்தை இழந்தது.எனவே இந்திரா காந்தி இப்பிரச்சனைகளைத் தீர்க்கும் வகையில் முடிவுகளை எடுத்தார்.இதற்கு காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பல தலைவர்கள்எதிர்த்தனர்.

1969 வாக்கில், காங்கிரஸ் கட்சிக்குள் பிரச்சனைகளும்,இந்திரா காந்திக்கும் மொராஜிதேசாய்க்கும் இடையில் பிளவும் அதிகரிக்க, இந்திரா காந்தி பல்வேறு முற்போக்குமுடிவுகளை அறிவித்தார். இது நமது கோரிக்கையை வற்புறுத்த உகந்த அரசியல் சூழலைஏற்படுத்தியது. கம்யூனிஸ்ட் கட்சி, ஏஐடியுசி மற்றும் பிற முற்போக்கு சக்திகளும் நமதுகோரிக்கையை எதிரொலித்தனர். 1957முதல் 1967 வரை பிரபாத் கர் நாடாளுமன்றஉறுப்பினராக இருந்தார். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவர் இந்தக் கோரிக்கையைநாடாளுமன்றத்தில் எழுப்பி, பல்வேறு அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத்திரட்டினார்.காலம் கனிந்தது. பிரதமர் இந்திரா காந்தி விரைந்து முடிவெடுத்தார். அவரது அரசு1969 ஜூலை 19ல் வங்கிகளைத் தேசியமயமாக்கும் அவசரச் சட்டத்தைப்பிரகடனப்படுத்தியது.

ஏஐபிஇஏ பேரியக்கத்தைப் பொருத்தவரை அதன் நெடுநாள் கண்டோட்டம்நனவானது. சுதந்திரா கட்சி (இப்போது அது இல்லை) மற்றும் ஜன சங்கம் (பாஜகவின் முந்தைய பெயர்) தவிர அனைத்து அரசியல் கட்சிகளும் நாடு முழுமையும் இந்தமுற்போக்கு நடவடிக்கையைக் கொண்டாடி வரவேற்றன.

வங்கிகள் தேசியமயம் வங்கித் தொழிலில் பெரிய அளவில் மாற்றம் செய்தது.கடைகோடி கிராமப்புறங்களிலும் வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டன. இதுவரைபுறக்கணிக்கப்பட்ட பிரிவுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடன்கள் வழங்கப்பட்டன.சாதாரண மக்கள் வங்கிச் சேவைகளை எளிதில் பெற முடிந்தது. வங்கிகளில் செலுத்தப்பட்ட பொதுமக்களின் பணத்திற்குபாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது. 55 ஆண்டுகளில் தேசியமயமாக்கப்பட்டவங்கிகள் தேசத்தின் பொருளாதாரத்தை முன்னோக்கி இயக்கும் முக்கிய எஞ்சின் ஆயின.

வளர்ச்சி, தாவிப்பாய்ச்சல் மற்றும் அவற்றில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின்பங்களிப்பு அபாரமானவை. ஆனால் தற்போது கார்ப்பரேட்டுகளின் அழுத்தம் காரணமாகவங்கிகளைத் தனியார் மயமாக்கி முதலாளிகளிடம் கையளிக்க அரசு விரும்புகிறது. அப்போதுதான் அவர்களால் வங்கிகளில் இருக்கும் பெருமதிப்பு வாய்ந்த சேமிப்புத்தொகைகளைக் கொள்ளையடித்து வாரிச் சுருட்ட முடியும்? இதுதான் நாமும் நமது தேசமும்எதிர் நோக்கும் ஆபத்து.

வங்கிகளைத் தேசியமயமாக்கப் போராடியது போலவே, இன்று பொதுத்துறைவங்கிகளைப் பாதுகாப்பதும் அவற்றைத் தனியார்மயப்படுத்த மேற்கொள்ளப்படும்முயற்சிகளை முடியடிப்பதுமே நமது தேசபக்த கடமை.

வங்கிகள் தனியார்மயத்திற்கு எதிரான பரப்புரை மற்றும் போராட்டங்களை நாம்தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். வங்கிகளைத் தனியார்மயப்படுத்தி அவற்றைப் பேராசை பிடித்தகார்ப்பரேட்டுகளிடம் கையளிப்பதை நாம் அனுமதிக்கக் கூடாது. மக்கள் பணம் மக்கள்நலனுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும், நாளும் அந்தச் செல்வங்கள் தனியார்கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளை கொண்டு போவதற்காக அல்ல. தேசிய சேமிப்பு பரவலானஅடிப்படையில் தேசிய வளர்ச்சி மேம்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட வேண்டும், அவற்றைக் கடன்வாங்கி,திரும்பக்கட்ட மறுத்து ஏமாற்றிவிட்டு, வெளிநாடுகளுக்குத் தப்பியோடும் குற்றவாளிகளுக்காகத் திரட்டப்பட்டவை அல்ல.

“பொதுத்துறை வங்கிகளைப் பாதுகாப்போம்! பொருளாதாரத்தைப் பாதுகாப்போம்! மக்களைக் காப்போம்! தேசத்தைக் காப்போம்!” என்ற உயரிய நோக்கங்களை அடைய வங்கிகள் தேசியமய நாளில் உறுதியேற்போம்.

தமிழில்: நீலகண்டன்

# கோவை சூயஸ் குடிநீர் திட்டம் ஏன் கைவிடப்பட வேண்டும்?



அருண் நெடுஞ்செழியன்

**தென்னகத்தின் மான்செஸ்டர் என்றழைக்கப்படுகிற கோவை நகரம் தமிழ்நாட்டில் இரண்டாவது பெரிய நகரமாகும். 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரத்தில் சுமார் 10.5 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். இந்நகர மக்களின் குடிநீர் தேவையை சிறுவாணி திட்டமும் பில்லூர் திட்டமும் பூர்த்தி செய்து வருகிறது.**

இந்நிலையில், கோவை மாநகரத்திற்கு 24 மணி நேரமும் தங்குதடையற்ற குடிநீர் விநியோகத்தை மேற்கொள்கிற திட்டமொன்றை கடந்த 2018 ஆம் சூயஸ் என்ற பிரான்சு நிறுவனத்திற்கு வழங்கியது அன்றைய அஇஅதிமுக அரசு.

சுமார் 3000 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டமே, இந்தியாவில் சூயஸ் நிறுவனம் வென்ற மிகப்பெரிய திட்டமென அந்நிறுவன இணைய செய்தி அறிவித்தது. முன்னதாக கடந்த 2012 ஆம் ஆண்டில் தலைநகர் டில்லி மாநகராட்சியின் குடிநீர் விநியோக திட்டத்தைப் பெற்ற இந்த நிறுவனம் படிப்படியாக பெங்களூரு, கொல்கத்தாவில் கிளை பரப்பி தற்போது தமிழ்நாட்டில் கோவை மாநகராட்சியின் குடிநீர் விநியோக சேவையை (சந்தையை!) கைப்பற்றியுள்ளது.

தாராளமய காலகட்டத்தில் தண்ணீரை "சரக்காக"மாற்றிய கார்ப்பரேட் முதலாளிகள், சுத்தமான குடிநீர் என்றும் 24 மணி நேரமும் தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் வழங்குவோம் என்றும் போலிப் பிரச்சாரத்தில் நகர குடிநீர் விநியோகத்தை தனியார்மயப்படுத்த அரசுக்கும் அழுத்தம் கொடுத்து பணிய வைக்கின்றனர். முதலாளித்துவ வர்க்கத்தின் முகமாக செயல்படுகிற அரசோ, பொதுத்துறை நிறுவனங்களின் உட்கட்டமைப்புகளை பலப்படுத்தாமல் தனியார் சேவையே சிறந்த சேவை என தனது பொறுப்பிலிருந்து நழுவிக்கொள்கிறது.

இந்தியாவில் இவ்வாறு தொலைத்தொடர்புத் துறை, போக்குவரத்துத்துறை, வங்கி சேவைகள் என கடந்த இருபது ஆண்டுகளில் மட்டும் அசுர வேகத்தில் அரசின் பொதுத்துறை நிறுவனங்களை, தனியார்மயப்படுத்தி வருவதை கண்டுவருகின்றோம். இதன் தொடர்ச்சியாக குடிநீர் விநியோக கட்டமைப்பை தனியார்மயப்படுத்துகிற முயற்சியும் தற்போது வேகமாக நடைபெற்றுவருகிறது. இந்த சூழலில்தான் பொதுத்துறை கட்டுப்பாட்டில் இருந்துவந்த கோவை நகர குடிநீர் விநியோக கட்டமைப்பு சூயஸ் எனும் பன்னாட்டு முதலாளித்துவ நிறுவனத்திற்கு தாரைவார்க்கப்படுகிறது.

எதிர்காலத்தில் தண்ணீர் கட்டணத்தை இந்நிறுவனமே நிர்ணயித்து வசூலித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கட்டணம் செலுத்தாதோர் வீடுகளின் குடிநீர் இணைப்பைத் துண்டிப்பது, தண்டம் வசூலிப்பது மட்டும் இல்லாமல் நகர குடிநீர் ஆதாரங்களின் முழுவதையும் தனது சொந்த கட்டுப்பாட்டில் எந்த கண்காணிப்பும் அற்ற வகையில் எடுத்துக்கொள்ளும் ஆபத்துக்களை மக்கள் உடனடியாக உணரவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, முதற்கட்ட திட்ட ஆய்வும் அடுத்த நான்காண்டில் திட்ட நடைமுறையாக்கம் மற்றும் அதற்குப் பிறகான 22 ஆண்டு காலத்திற்கு பராமரிப்பு என மொத்தமாக 26 ஆண்டிற்கு சூயஸ் நிறுவனத்துடன் கோவை மாநகராட்சி ஒப்பந்தம் போட்டது.

கோவை மாநகர சுற்றுவட்டாரத்தின் 100 கி.மீ. பரப்பளவில் உள்ள சுமார் 1500 கி.மீ. குடிநீர் குழாய்கள், குடிநீர் தொட்டிகள், நீராதாரங்கள், தானியங்கி குடிநீர் மீட்டர்கள் ,வால்வுகள், ஒரு லட்சத்து 50 ஆயிரம் குடிநீர் இணைப்பின் அனைத்து விநியோக சேவைகளும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் வருகின்றன. இந்தத் திட்ட அறிவிப்பு வெளியான சில நாட்களில், திட்டம் குறித்த குழப்பங்கள் வெளிப்படவே, மாநகர குடிநீர் சேவையை மட்டுமே இந்நிறுவனம் வழங்கும்; மற்றபடி, மாநகராட்சியே வழக்கம்போல குடிநீர் கட்டணத்தை நிர்ணயிக்கும் என மாநகராட்சி விளக்கமளித்தது.

இந்த விளக்கத்தின் உண்மைத் தன்மையானது போகப் போகத்தான் தெரியும்!

குடிநீர் விநியோக சேவையை தனியார்மயப்படுத்துகிற இந்த ஒப்பந்தத்தை பல்வேறு அரசியல் கட்சிகள், சூழலியல் அமைப்புகள் எதிர்த்தன. இந்த ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்யவேண்டும் என அரசுக்கு கோரிக்கை வைத்தன. இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தபோது அப்போதைய எதிர்க்கட்சி தலைவராக இருந்த இன்றைய முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்திற்கு கடுமையாக கண்டனம் தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக சூயஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள இணையதள பத்திரிகைச் செய்தியை மேற்கோள் காட்டி கண்டன அறிக்கை வெளியிட்டார். இந்நிறுவனமானது பொலிவியாவில் மேற்கொண்ட அராஜக கட்டண வசூலும், அதன் காரணமாக அங்கு எழுந்த போராட்டங்களையும் சுட்டிக்காட்டி, கோவை மாநகர குடிநீர் விநியோகத்தை தனியார்வசம் ஒப்படைப்பதற்கு கடும் கண்டனம் தெரிவித்தார். ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகோ, இந்த திட்டத்தில் 13 விழுக்காடு முடிந்துவிட்டதாகவும் இனி நிறுத்துவதற்கு வாய்ப்பில்லை எனவும் திமுக அரசுகூறுகிறது.

### தனியார்மய குடிநீர் சேவை ஒப்பந்தங்கள்

குடிநீர் விநியோகத்தை பொதுத்துறை கட்டுப்பாட்டில் இருந்து பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவது தேசிய நீர்க் கொள்கையின் பகுதியாகும். கடந்த 2002ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இந்தியாவின் தேசிய நீர்க்கொள்கையில், நீர்த்தட்டுப்பாட்டை சரிசெய்யவும், நீர் விநியோக முறைகளை மேம்படுத்தவும் நீர் சேவையில் தனியாரின் பங்களிப்பு அவசியம் என வாதிட்டது ஒன்றிய அரசு. இவ்வாதத்தை முன்வைத்தே இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் "வளர்ச்சி மாதிரி"யிலும் நீர் விநியோகமேலாண்மை மீதான தனியாரின் ஆளுகைக்கு பொய்யான கருத்துருவாக்கத்தை மேற்கொள்கிறது.

குடிநீர் சேவையில் ஈடுபட்டுள்ள பெருநிறுவனங்கள்,உலக வங்கி,பன்னாட்டு நிதியம் போன்ற உலகின் மூலதன அதிகார அடுக்குகள்தங்களது நவதாராளவாத சந்தைப்பொருளாதார ஏற்பாட்டின் வாயிலாக நீரை வணிகப் பண்டமாக்கி விற்பனையில் ஈடுபட்டு லாபமீட்டுவதில் பெரு முனைப்புடன் வெறித்தனமாக ஈடுபடுகின்றன.

நீர் சேவை மீதான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தி ஒரு திட்டத்தின் பேரில் தொடர்ச்சியாக லாபத்தை ஈட்டுவதற்கு உகந்தமுறையில் பல ஒப்பந்த மாதிரிகளை நீர் விநியோக பெரு நிறுவனங்கள் முன்வைக்கின்றன. இவ்வொப்பந்தங்களின் வாயிலாக நீர் சேவைக்கான உரிமையைப் பெறுகிற பெருநிறுவனங்கள் தங்கள் இஷ்டம் போல நீர் சேவைக்கான கட்டணத்தை வசூலிப்பதால் நடுத்தர வர்க்கத்தினரும் உழைக்கும் மக்களும் கடுமையான இன்னலுக்கு ஆளாகின்றனர். ஒரு கட்டத்தில் மொத்த வருமானத்தில் ஐம்பது விழுக்காட்டை குடிநீருக்கே செலவு செய்ய வேண்டிய அளவுக்கு நீர் கட்டணம் உயர்த்தப்படுகிறது. இதன் விளைவாக குடிநீர் விநியோக உரிமையைப் பெற்ற தனியார் நிறுவனங்களுக்கு எதிரான மக்களின் தன்னெழுச்சி மிக்க போராட்டங்கள் வேகமாக வெடிக்கத்தொடங்குகிறது. இதற்கு மிகப்பெரும் உதாரணம் 2000 ஆம் ஆண்டில் பொலிவியாவில் சூயெஸ் மற்றும் பெக்டல் நிறுவனத்திற்கு எதிராக எழுச்சி பெற்ற போராட்டங்களாகும்.



பொதுவாக நீர் சேவையை தனியாருக்கு வழங்குவதில் உலகெங்கிலும் பல ஒப்பந்த மாதிரிகள் கடைபிடிக்கப்படுகிறது. அவை

**சேவை ஒப்பந்தம் (Service Contract):** இவ்வொப்பந்தத்தின்படி நீர்சேவை மீதான கட்டுப்பாடும் பொறுப்பும் பெரும்பாலும் அரசின் வசம் இருக்கும். அதாவது நீர் சேவைக்கான பராமரிப்பும் செயலாக்கமும் அரசின் பொறுப்பாகும். அளவு காணல்,ரசீதளித்தல் போன்ற வேலைகளில் மட்டும் தனியார் நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படும். இதிலும் பெரும்பாலும் வெளிப்படைத்தன்மை கடைபிடிக்கப்படுவதில்லை.

கட்டுதல், செயலாற்றுதல், சொந்தமாக்குதல் மற்றும் கையளிப்பது சுருக்கமாக பூட் (Boot)ஒப்பந்தம் (Built,operate,own,Transfer): தனியார் முதலீடு செய்து, குடிநீர் திட்டத்தைக்கட்டியமைத்து, தானேசொந்தமாக இயக்கி மக்களுக்கு நீர் வழங்கி, இருபது அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குப்பிறகு அரசிடம் திட்டத்தை கைமாற்றுவது என்று இதன்பொருள். இவ்வகை பூட் ஒப்பந்தமே பெரும்பாலான வளரும் நாடுகளில் கடைபிடிக்கபடுகிறது. தமிழகத்தின் திருப்பூர் முதல் பொலிவியாவின் கொச்சபம்பா வரை பூட்டே ஆதிக்கம் செலுத்துகிறது. தற்போது கோவையில் சூயசுடன் அரசு விளிஜி ஒப்பந்தத்தை போட்டுள்ளது. அதாவது முதலீடு, கட்டுமானம், பராமரிப்பு மற்றும் கையளிப்பது.

மொத்த விற்பனைக்கான ஒப்பந்தம் (Divestiture): இவ்வொப்பந்தத்தில் அரசின் கட்டுப்பாடு முழுவதும் தளர்த்தப்பட்டு நீர் சேவையுடன் நீர் ஆதாரங்களையும் சேர்த்தே தனியாருக்கு கையளிக்கப்படும். இவ்வொப்பந்தத்தின்படியே சத்தீஸ்கரின் சிவ்னாத் நதியை இருபத்தி இரண்டு காலத்திற்கு ரெடியஸ் என்ற நிறுவனத்திற்கு தாரைவார்த்துள்ளார்கள்.

### சூயெஸ் நிறுவனத்தின் கடந்த கால வரலாறு:

அரசின் பொதுத்துறை குடிநீர் விநியோக அமைப்பைப் பன்னாட்டு நிறுவனத்திற்கு தாரை வார்த்தால் ஏற்படுகிற பின்விளைவுகளுக்கு இன்றுவரை பொலிவியா எடுத்துக்காட்டாக உள்ளது. ஒவ்வொரு குடிமகனுக்கும் இன்றியமையாத வாழ்வாதாரத் தேவையான தண்ணீரை, தனியார்மயத்தின் கீழ் சந்தையாக மாற்றுவதென்பது அடிப்படை ஜனநாயக உரிமைக்கு எதிரானது. அது மக்கள் நலன்களுக்கு நேர் எதிரானது.1980 களில் பொலிவியாவில் தாராளமயம், தனியார்மயம், உலகமயப் பொருளாதார கொள்கை அமலாக்கப்பட்டது.பன்னாட்டு நிதியகம்,உலக வங்கியின் கடன்களைப் பெற்றபொலிவிய அரசு, அதற்குமுதலையாக நாட்டின் வளங்களை, பொதுத்துறை நிறுவனங்களைப் பன்னாட்டு நிறுவனங்களுக்கு திறந்துவிட்டது. உலக வங்கிக் கடன்களின் இலக்கும் அதுதான்.

முன்னணி தண்ணீர் கொள்ளையர்களான பெக்டலும், சூயெசும் பொலிவியாவில் குடிநீர் விநியோக அமைப்பைக் கைப்பற்றினார்கள். பொலிவியத் தலைநகரம் லாபாசின் எல் அல்ட்டோ பகுதியின் குடிநீர் விநியோகம் முழுவதும் சூயெசிற்கு கையளிக்கப்பட்டது. சேவைக்கும் சந்தைக்குமான முரண்பாடு உடனடியாக வெடித்தது..சூயெஸ் நிறுவனம், எல் அல்டோவில் தண்ணீர் கட்டணத்தைத் திடுமென 30 விழுக்காட்டிற்கு உயர்த்தியது. நகர குடிநீர்க் குழாய்கள், கிணறுகள் அனைத்திற்கும் பூட்டுப் போட்டது. புறநகரங்களில் முறையான குடிநீர் இணைப்புகள் வழங்கப்படவில்லை என பல்வேறு புகார்கள் எழுந்தன. சுயநல மூலதன முதலீடுகளுக்கும் சாமானிய உழைக்கும் மக்களுக்குமான போர் மூண்டது. சூயெஸ் நிறுவனத்தின் கோர சுரண்டலுக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் வீதிக்கு வந்தனர். சூயெஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை உடனடியாக அரசு விலக்கிக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையுடன் வெடித்த இப்போராட்டம் 2005 இல் தீவிரம் பெற்றது. இப்போராட்டம் "நுகர்வோர் கிளர்ச்சி"என்றே பெயர் பெற்றது. போலவே பெக்டல் நிறுவனத்திற்கு எதிராக மாபெரும் போராட்டம் கொச்சபம்பாவில் நடைபெற்றது. நிலைமை கைமீறிப் போவதை உணர்ந்த அரசு இறுதியில் ஒப்பந்தங்களை ரத்து செய்தது. அதேநேரத்தில் நிறுவனங்கள் நஷ்ட ஈட்டையும் பெற்றுக் கொண்டன!

இது ஏதோ பொலிவியாவில் நடைபெற்ற கதை என நம்மை ஆசுவாசப்படுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் இந்தியாவில் பல நகரங்களில் பல்வேறு பன்னாட்டு உள்நாட்டு முதலாளிகள் வேகமாக "தண்ணீர் சந்தையில்"கால் பதித்து வருகின்றன. பல்வேறு நகரங்களில் "மாதிரித் திட்டங்கள்"செயலாக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஸ்மார்ட் சிட்டி திட்டங்கள் அனைத்தும் இவர்களுக்கான சந்தையை ஊக்குவிக்கிறது. சூயெஸ், வியோல்லா போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் டாட்டா, ரேடியஸ், ஆரெஞ் போன்ற உள்நாட்டு முதலாளிகள் தண்ணீர் சந்தையைப் பிடிப்பதற்கு பல்வேறு வகையில்(கட்சிகளுக்கு நன்கொடை, பரிசுகள் உள்ளிட்ட) அரசியல் லாபிக்களை மேற்கொண்டு வருகின்றன.

குடிநீர் விநியோகம் மீதான உரிமையை பொதுத்துறை நிறுவனத்திடம் இருந்து தனியார் நிறுவனத்திற்கு தாரை வார்த்தால் ஏற்படுகிற மோசமான பின்விளைகளுக்கு உலக அளவில் இருந்து உள்ளூர் மட்டம் வரை எண்ணற்ற படிப்பினை உள்ளது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போலே இந்த ஒரு உதாரணமே போதும்!

இது ஏதோ கோவை நகரப் பிரச்சனை என்றோ, குடிநீர் கட்டண நிர்ணயப்பு உரிமையானது மாநகராட்சி வசம் மட்டுமே எப்போதும் இருக்கும் என்றோ நாம் பகல் கனவு கண்டு கொண்டிருக்க முடியாது! படிப்படியாக தங்களது கட்டுப்பாட்டில் நகரின் ஒட்டுமொத்த குடிநீர் விநியோகத்தைக் கொண்டு வருவது, பிற நகரங்களுக்கு அதை விரிவுபடுத்துவது என்ற நீண்ட கால தொலை நோக்கு திட்டத்தின் அடிப்படையிலேயே இந்நிறுவனங்கள் குடிநீர் சந்தையை உருவாக்கி கைப்பற்றுகின்றன. சூயெஸ் போன்ற கார்ப்பரேட் நிறுவனத்தை நாம் உடனடியாக விரட்டவில்லை என்றால் பொலிவியா கதிதான் நமக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

தொடர்புக்கு: 9842391963

# வனங்களை அழிக்கவா வனப்பாதுகாப்பு சட்டத்திருத்தம்?



ஆர்.ராமானுஜம்

**வனப் பாதுகாப்புச் சட்ட திருத்தங்கள் மசோதா 2023 இந்த நாடாளுமன்ற கூட்டத் தொடரில் நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள திருத்தங்கள், கார்ப்பரேட்டுகளுக்கு இனிப்பாகவும் சமூக நலன் பேணுவோர், இயற்கை ஆர்வலர்கள், பல நூற்றாண்டுகளாக வனங்களில் வாழ்ந்துவரும் மக்களுக்கு இடியாகவும் உள்ளன.**



### சிப்கோ இயக்கம்

1927ல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், இந்திய வனச் சட்டம் (INDIAN FOREST ACT 1927) கொண்டுவரப்பட்டது. சுதந்திர இந்தியாவில் அன்றைய பிரிக்கப் படாத உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார், ஒடிசா மாநிலங்களில் வனங்களின் அடர்த்தியும், வனவாசிகளின் எண்ணிக்கையும் அதிகமாகவே இருந்தது. இப்போதுசட்டீஸ்கர், ஜார்க்கண்ட், தெற்கு உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் ஒடிசா என அவை பரந்து உள்ளன. தன்டேவாடாவனங்களில் நெடுங் காலமாய் வாழ்ந்தும், பராமரித்தும் வருகின்ற பைலதில்லா பழங்குடியினர் 1970களிலிருந்தே தங்கள் மண்ணைப் பல்வேறு நாடுகளின் கழுகுக் கண்கள் கொத்திக் கொண்டு போகமுயல்வதையும், இந்திய அரசு அதற்கு இசைவதையும் பொறுக்காமல் வீறுகொண்டு போராடி வருகின்றனர். 2019ல் மிகப் பெரிய அளவில் போராடி மாநில அரசின் முயற்சியைக் கைவிடச் செய்தனர். அங்குள்ள காடுகளின் மேல் சர்வதேச, இந்தியவணிகக் கழுகளுக்கு உள்ள பார்வை அதன் பசுமை வன வளம் அல்ல. அதன் கீழிருக்கும், மண்ணில்புதைந்திருக்கும் சர்வதேசத் தரம் வாய்ந்த இரும்புத்தாது. அங்குள்ள பழங்குடிகளை அப்புறப்படுத்திவிட்டு, அவர்களையே குறைந்த கூலியில் வேலைக்கு அமர்த்தி, கொள்ளையிலும் கொள்ளை லாபம் காண்பதேஅது. ஒடிசாவில் போஸ்கோ நிறுவனம் பற்றிய நிகழ்வுகளும் அதே போலத்தான். கோவாவில் டூபாண்ட்நிறுவனம் (பாஜக ஆட்சியில்தான்) மக்கள் எதிர்ப்பால் விரட்டப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டில் அந்த நிறுவனத்துக்கு அன்றைய ஜெயலலிதா அரசுஒப்புதல் தந்தது.

1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டம் (FOREST CONSERVATION ACT 1980) கொண்டுவரப்பட்டுமுற்றிலும் நடைமுறைக்கு வந்தது. நாட்டு மக்கள், குறிப்பாக காலம் காலமாய் வனங்களிலேயே வாழ்ந்துவரும் குடிகளுக்கும் சாதக, பாதக அம்சங்களும் இருந்தன. குறிப்பாக, வனப் பகுதிக்கு, வனஉயிரினங்களுக்கு, வன வளத்திற்கு, சுற்றுப்புற, நிலப் பாதுகாப்பிற்கு பெருங்க்கேடு விளைவிக்கும் தனிநபர், கூட்டம், நிறுவனம் இவர்களுக்கான தண்டனை சிறைவாசம் என்றிருந்தது. (ஆனால்,வன அதிகாரிகள் அடுப்பெரிக்க சுள்ளி பொறுக்க வருபவர்களுக்குத் தண்டனை தருவதுதான் அதிகம்)

ஈஷா மையம், காருண்யா போன்றவை இந்தச் சட்டப் பிரிவில் வராது. அந்தந்த "ஆண்டவர்கள்" பார்த்துக்கொண்டார்கள்போலும். பின்னர் 1988 ஆம் ஆண்டு, ஒன்றிய அரசு 'வனக் கொள்கை1988' எனும் திட்ட அறிவிப்பை வெளியிட்டது. அப்போது வெளிவந்த விமர்சனங்களில்முக்கியமானது "உறுதிப்படுத்தப்பட்ட வனப்பகுதி, வனங்கள்" என்பது பற்றிய வரையறுப்பு, பாதிப்பு அதிகம் ஏற்படுத்தும் சட்ட மீறல் குற்றங்களுக்குச்சிறைத்தண்டனைஎன்னும் பிரிவு இந்தச்சட்டத்தில் தொடர்ந்தது. 2006 ஆம் ஆண்டு மற்றுமொரு சட்டம் 'வன உரிமைச் சட்டம் 2006' (மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இந்தச் சட்டத்தின் மூலம் சில நல்லவிளைவுகளை கொண்டுவரத் திட்டமிட்டிருந்தது. சிலவற்றைச் செயல்படுத்துமாறுமாநிலங்களுக்குச் சுற்றறிக்கைகளும்அனுப்பியது.

முதன் முதலாக, வனங்களில் வாழ்வோர் பற்றிய அரசின் குறிப்புகளும், அங்கு வாழ்வோரின்வாழ்வாதாரம்மற்றும் வரலாற்று ரீதியாககாடுகளில்வாழ்ந்து வருவோருக்கு இழைக்கப்பட்டிருந்தஅநீதி பற்றியும் இந்தச் சட்டம் நாட்டினர் இடையே ஒரு உரையாடலை ஏற்படுத்தியது. சட்டம் சிறப்பானதுதான் எனினும் திட்டப்படியே வனச்சட்டம் நிறைவேற்றப்பட்டதா என்றால், அது கேள்விக்குறிதான். மத்திய இந்தியாவின் வனங்களை கையகப்படுத்தி 'வளர்ச்சியை' கொண்டுவருவதற்கான போட்டிகள் அவ்வப்போது நடந்து கொண்டுதான் இருந்தன.வேதாந்தா நிறுவனம் இந்தக் காலத்தில் தன் வணிக சாம்ராஜ்ஜியத்தை நன்றாகவே விரிவுபடுத்தியது.அதற்கு, மத்திய இந்தியாவின் பல வனப் பகுதிகள் 'நாட்டின் பெரும் கட்டுமான வளர்ச்சிக்காக' கொடுக்கப் பட்டது. அந்தப் பட்டியல் நீளமானது.

பல நேரங்களில், 'தேவை'யின் அடிப்படையில், வனப் பகுதி என வரையறை செய்யப்பட்டஇடங்கள், 'அனுமதியின்?' பேரில்வனம்தொடர்பில்லாதசெயல்களுக்குக் கொடுக்கப்பட்டதைஒன்றிய அரசே தெரி வித்துள்ளது. அவற்றில் ஒன்று, 1980 முதல் 1996வரை வனப்பகுதிகள், "உத்தரவுகளின்" பேரில் மற்ற காரியங்களுக்குப் பயன்படுத்தப் பட்டிருந்தால்அது வன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வராது.

அரசின் அனுமதியும் போஸ்கோ நிறுவனத்தின் செயல்பாடும் முற்றிலும்வேறுபட்டிருந்தது. வனப் பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதியில் 75% பரப்பை ஆக்கிரமித்து, 2006 வன உரிமைச் சட்டத்தை அந்தநிறுவனம்அப்பட்டமாக மீறியிருந்தது. அந்தப் பகுதியில் வாழும்பூர்வகுடிகளின் நலனுக்காக ஏற்படுத்தப்படும் நலத் திட்டங்களைத் தவிர, அந்த மக்களின்இசைவுடன்தான் எந்தத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால் போஸ்கோ இதனை மீறியது.மக்கள் வெகுண்டெழுந்து போராடினர். இது மத்திய இந்தியாவின் பூர்வகுடிகளின் போராட்டவாழ்க்கை வரலாற்றின் ஒரு சிறு துளியே!

இவற்றை எல்லாம் மனதில் கொண்டுதான், இன்றைய ஒன்றிய அரசு "வனப் பாதுகாப்பு திருத்தச் சட்ட"மசோதா கொண்டுவந்து நிறைவேற்ற உள்ளது. இதன்முக்கிய அம்சங்கள், நாட்டின் வன வளத்தின் மீது அது என்ன தாக்கம் தரப் போகிறது என்று பார்க்கலாம்.

1) உலக வங்கியின் அறிக்கையில் "வணிகம், தொழில் புரிய ஏதுவான" நாடுகளில், "இந்தியாமுன்னேற" ஆலோசனைகளை, அறிவுரைகளை வாரி வழங்கியிருக்கிறது. அதன்படி இன்றையஒன்றிய அரசு, வனப் பாதுகாப்பை மீறுபவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கைஎடுக்காமல், பண அபராதம் விதிக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளது. எந்த மாதிரி சட்டமீறலுக்கும், சிறைத் தண்டனை என்பது நீக்கப்பட்டுள்ளது. அபராதம், கூடுதல் அபராதம், அதைக் கட்ட மறுத்தால் மட்டுமே சிறைத் தண்டனை எனும் திருத்தம் அதிலுள்ளது. கருணையின் பிம்பம் மோடி அரசு. தொழிலில் மூலதனம் போடவருவோரின் அச்சம் தவிர்க்கப்பட்டுள்ளதாம்.

2) சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள, பாதிப்பிருப்பின் நிவாரணம் பெற, அரசு உத்தரவுமீது நியாயம் பெற இந்தத் திருத்தங்கள் படி, யாரும் எந்த நீதிமன்றத்தையும் அணுக முடியாது.ஒன்றிய அரசின் இணைச் செயலாளர் பதவிக்கு இணையான அதிகாரி ஒருவர் நடுவராக இருந்து தீர்வு காண்பார்.

3) 25 அக்டோபர் 1980ன் போது எவையெல்லாம் காடுகள் என்று வனச் சட்டம் கூறியதோ, அவையன்றி மற்றவை இந்தச் சட்டத்தின் வரையறைக்குள் வராது. இந்தத் திருத்தம்அந்த வனப் பகுதிகளில் வாழும் பூர்வ குடிகளின் இருப்பைக் கேள்விக் குறியாக்கும். 2006ல்மன்மோகன் சிங் அரசு கொண்டுவந்த வன உரிமைச் சட்டத்தின் சாதகங்களை, வனப்பூர்வகுடிகளின், பழங்குடி மக்களின் காடுவாழ் உரிமையை வீசி எறிந்து விடும்.

4) காடுகள் பற்றிய சட்ட வரைவுகள் எல்லாமே இந்தத் திருத்தங்கள் வந்த பின் ஒன்றியஅரசிடமே இருக்கும். மாநில அரசுகள் இனி மரம் நடலாம். செடி நடலாம். வன விலங்குகளைக்கொண்டு வன விலங்குகளின் "உயிரியல் பூங்கா நடத்தி டிக்கெட் விற்றுக் காசு வசூலித்துக்கொள்ளலாம். வனக் காப்பாளர் அலுவலகங்களில் ஸ்டாலின் படமோ, மம்தா பானர்ஜி படமோ,சித்தாராமையா படமோ மாட்டிக் கொள்ளலாம். அவ்வளவே.

5) ஒன்றிய அரசு தேச நலன், பாதுகாப்புக்கு என சர்வதேச எல்லை யிலிருந்துஉட்புறம் 100 கிலோ மீட்டருக்குள்ளாக எந்த திட்டத்தையும்,, சாலையையும், கட்டிடத்தையும்புதிதாய் கட்டலாம்; விரிவுபடுத்தலாம். இதற்கு முன் அனுமதி தேவையில்லை. தேசநலன்... அதுபற்றி எந்தப் பேச்சுமில்லை.

இந்தசட்டம்குறித்து ஆய்வுசெய்வதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்றநிலைக்குழுவில் 31 உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களில் 18பேர் பாஜகவினர். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களின் ஆலோசனைகள், எதிர்ப்புக்கள், வன ஆர்வலர்கள், உயிரியல் அறிவியலாளர்களின்ஆலோசனைகள், குறிப்பிட்டநிலைப்பாடுகள்மீதானஎதிர்ப்புகள் நிலைக்குழுவில் தெரிவிக்கப்பட்டன. இருப்பினும் வழக்கம் போல, ஒன்றிய அரசு தனது மனதின் குரலைத் (மன்கீ பாத்) தான் வெளியில் சொல்லுமே தவிர,மற்றவர்கள் சொல்வதை செவி மடுக்காது. இந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட்டுவிடும் என எதிர்பார்க்கலாம்.

எனவே,இந்த வனப் பாதுகாப்பு சட்ட திருத்தம் 2023ன் நச்சுத் தன்மையை எதிர்க்க அனைவரும் ஒன்றிணைவது அவசியம்.

தொடர்புக்கு 9449826636

## அரசு சொத்தாக மாற்றுவது தாரைவார்க்கவா?


பொதுச்சொத்து,சமூகச் சொத்து, மக்கள் சொத்து (PUBLIC PROPERTY) என்பதும் 'அரசுச் சொத்து' (STATE PROPERTY OR GOVERNMENT PROPERTY) என்பதும் முற்றிலும் வேறுபட்டது. ஒரு எளிய எடுத்துக்காட்டு: சிற்றூர் ஒன்றில் நன்னீர் குளம் உள்ளது. இதனை அந்த ஊர் மக்கள் அனைவரும்பயன்படுத்துகின்றனர். அது மக்களின் சமூக சொத்து, மக்கள் சொத்து.

திடீரென அரசுஒரு ஆணை பிறப்பித்து, மக்களின் நலனுக்காகஎனச் சொல்லி அதைக் கையகப்படுத்துகிறது என வைத்துக்கொள்வோம். சிறிது காலம் கழித்து, அந்த நன்னீர்க் குளத்திற்குவேலி போடப்படும். குத்தகைதாரர் பெயர் போடப்படும். "உள்ளே நுழைவது சட்ட விரோதம்; மீறினால்தண்டனை"என எச்சரிக்கைப் பலகையொன்று தொங்கும். அல்லவா?

இது கற்பனைக் கதையா? இல்லவே இல்லை! பல துறைமுகங்களைச் சுற்றி 56கிலோ மீட்டர் தொலைவுக்கு பன்னெடும் காலமாக வாழ்ந்துவந்த மீனவக் குடும்பங்கள், இன்று அந்தப் பகுதிக்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனை ஒன்றிய அரசின் கண்ணசைவோடு கடற்பகுதி, துறைமுகப் பராமரிப்பு, செப்பனிடுதல் ஒப்பந்ததாரர்அரண்மனைத்தோழர் அதானி குழுமம் செய்துள்ளது. ஜி.எம்.ஆர், மற்றும் அதானி குழுமங்கள்பல விமான நிலயங்களைச் சுற்றி, தேவைக்கும் அதிகமானவன, விவசாய நிலங்களைப் பெற்றுள்ளன. அந்த நிலங்கள் முதலில் பொதுச்சொத்து, பின்னர் அரசின் சொத்து, அதன் பின்னர் அவை "அவர்களின்" சொத்து. இதை, இந்தக் கொள்ளைப் பாதையைப் பொருளாதார, அரசியல்வல்லுநர் அக்ரவால், தன்னுடைய "PLUNDER OF THE COMMONS" என்ற நூலில், விமானநிலையங்களுக்காக, துறைமுக விரிவாக்கத்திற்காக, தொழில் வளர்ச்சிக்காகஎன்று நிலங்களைக் கையகப்படுத்தியவரலாற்றை துல்லியமாகப் பட்டியலிட்டிருக்கிறார்.

# பிரெஞ்சுப் புரட்சியும், இன்றைய இந்தியாவும்

**பிரான்ஸ் தேசத்தில் முடியாட்சி முடிவுக்கு வந்ததைக் கொண்டாடும் தேசிய நாள் விழாவில் கலந்துகொள்ள இந்தியப் பிரதமர் பாரீஸ் சென்றிருந்தார்.**



நீராவி எஞ்சின் கண்டுபிடிக்கப்பட்ட 34 ஆண்டுகளுக்குப் பின்னர், 1789 ஜூலை14. அது நிலப்பிரபுத்துவம் நொறுங்கி முதலாளித்துவம் தொடங்கிய காலகட்டம். அப்போதும் பிரபுத்துவ ராஜவம்சத்தினரின் கைகளிலே மேலாண்மைச் செல்வாக்குஇருந்ததால், முதலாளிகள் அதிகாரத்தில் பங்கு கிடைக்காத அதிருப்தியில் இருந்தனர். தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்தில் 90சதவீதத்தை விழுங்கிய அதீத ரொட்டி(உணவு) விலை உயர்வு அதிருப்தியில் இருந்தனர். இதனால் உடை, இருப்பிடம், சுகாதாரம், கல்விபோன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கும் செலவிட முடியவில்லை. நிலப்பிரபுக்களின்விருப்பப்படி ஆட வேண்டிய அடிமை நுகத்தடியில் விவசாயிகள் கட்டுண்டு கிடந்தனர்.

சமூகக்கட்டமைப்பு முதல் மேலாதிக்கம் வரை அனைத்தையும் நீராவிச் சக்திமாற்றியது.வயல்வெளி முதல் தொழிற்சாலைகள் வரை மாற்றியது. இந்த மாற்றம் அதற்கான விலையையும் கோரியது. அதுதான், பாரீஸில் நடைபெற்ற சிறைத் தகர்ப்பு எழுச்சி,ஒரு புதிய தொடக்கத்தின், புரட்சிக்கான சமிக்ஞையைத் தந்தது; அதன் பிறகே, “சுதந்திரம்,சமத்துவம் சகோதரத்துவம்” என்ற உயரிய லட்சியங்கள் அடிப்படையில் குடியரசுஅமைக்கப்பட்டது. ஆனால் அந்த நாட்கள் வித்தியாசமானவை. முழுமையான மேற்கட்டுமானம், வேளாண் முறை, கண்மூடித்தனமான நிலப்பிரபுத்துவ ஆட்சி கலகலத்து நொறுங்கத் தொடங்கியது. அரசரும் அரசியும் இனியும் வணங்கத்தக்க தெய்வாம்சங்கள்அல்ல. மக்களுக்கு அரசர் 16வது லூயி (Louis XVI), அரசி மேரி அன்டோனெட் மீது ஒருசிறிதும் நம்பிக்கை இல்லை.

கண்ணை உறுத்தும் ஓர் உண்மை, கண்ணுக்கெட்டிய தூரம் முடிவில்லாத மிகக்கொடுமையான துன்பம், எங்கும் பரவி இருந்த பசி பட்டினியில் தெரிந்தது. பசியில்இருந்த மக்கள் அதனால் கடும் சீற்றத்தில் இருந்தனர். மற்றொரு அடிப்படையானஉண்மை, பிரான்ஸ் நாட்டைச் சூழ்ந்திருந்த பொருளாதார திவால் நிலைமைஎழுச்சிப் புயலைக் கொண்டுவரப் போதுமானதாக இருந்தது.1789 அந்த மேமாதத்தில் அரசியல் நிச்சயமற்றத் தன்மை, பொருளாதார இன்னல்கள் இரண்டும்தீவிரமடைந்தன. நிலைமை கொதி நிலைக்கு வந்தது. புதிய சிந்தனையுடன் ஒருபுதிய சமுதாயம் அரும்பும் அறிகுறிகள் மெல்ல உருவாயின. தனிமனிதஉரிமைகள் மற்றும் சமத்துவ அடிப்படையிலான பிரதிநிதித்துவமுள்ள அரசுக்கான தேவை வளர்ந்தது. ஜனநாயகம் குறித்த கருத்தியல்கள் வடிவம் பெறுவதில் பிரான்ஸ்மட்டும் தனித்து இல்லை, வளர்ச்சி அடைந்த உலகம் முழுமையும் புதியவிடியலுக்காகக் காத்திருந்தது. அந்த மூலதனத்தின் ஆட்சி, பிரான்ஸ் தேசத்தால் மட்டும் அடையாளம் காணப்படவில்லை, ஆனால் (1765 1783 ஆண்டுகளுக்குஇடையில் நடைபெற்ற அரசியல் எழுச்சியான) அமெரிக்கப் புரட்சியாலும்ஊக்கப்படுத்தப்பட்டது.

அப்போது, ஜூலை 14அன்றுகாலை பாரீஸைச் சுற்றிவளைக்க படைகளுக்கு அரசர்உத்தரவிட்டதாக ஒரு வதந்தி பரவத் தொடங்கியது. அதற்கான எதிர்வினை பயமாகவோ அன்றி துரோகம் இழைப்பதாகவோ இல்லை; மாறாக, அது வலிமைபொருந்தியதாகவும் உரத்தும் இருந்தது. அது ஒரு வரலாற்றுத் தருணம்,அன்றையநிகழ்வுஉலகத்தையே மாற்றிப் போட்டது. சர்வாதிகார முடியாட்சிக்கு எதிராகஅச்சமற்ற மாபெரும் மக்கள் கூட்டம், நிலப்பிரபுத்துவத்தின் அடையாளமாகவிளங்கிய பாஸ்டில் சிறை மீது தாக்குதல் தொடுத்தது. அரண்மனை கோட்டை அரணின்ஆளுநர் பேச்சுவார்த்தை நடத்த முயன்றார். அந்தப்பேச்சுதோல்வியடைய அவர் முதல் பலிஆனார். துண்டிக்கப்பட்ட ஆளுநரின் தலையை ஓர் ஈட்டியில் சொருகி மக்கள் வீதிகளில் வலம் வந்தனர். தங்களை நசுக்கிவந்தவர்கள் மீது அதிகாரம் செலுத்தும் போதை அல்ல. மக்களிடம் நீறு பூத்த நெருப்பாகக்கனன்று வந்த சீற்றம் அது. புரட்சி தொடங்கியது. செப்டம்பர் 1792ல்பிரான்ஸ் குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது. 16வது லூயி மன்னர் 1793 ஜனவரி 21 அன்று புரட்சியாளர்களால் விசாரிக்கப்பட்டார். முடியாட்சி முடிவுக்கு வந்தது. அன்றைக்கு பிரான்சுகுடியரசின் முதல் ஆண்டாக அறிவிக்கப்பட்டது. 16வது லூயி மன்னரை கடைசி லூயி (Louis the Last)என மக்களால் அழைக்கப்பட்டார்.

கில்லெட்டினில் (தலை வெட்டும் கருவி) கிடத்தப்பட்டு 16வது லூயி மன்னரின் தலை துண்டிக்கப்பட்டது. அவரது மரணத்துடன் நிலப்பிரபுத்துவ முறை முடிவுக்கு வரத் தொடங்கியது. அதன்பின் வெர்சாய்ஸ் அரண்மனையில் (பாரீசுக்கு மேற்கே 12 மைல் தொலைவில் 14வதுலூயியால் வெர்சாய்ஸில் கட்டப்பட்ட அரச இல்லத்தில்) எந்த அரசரும்வாழவில்லை.

புரட்சியின் இறுதி விளைவுகள் அற்புதம், ஆனால் எதிர்பார்க்கப்படாதது அல்ல. மாற்றம் நிரந்தரமானது, கருவிகளின் பரிணாமத்தால் வழிநடத்தப்படுவது. பிரெஞ்ச் புரட்சியைப் பொருத்தவரை அது நீராவியின் சக்தியால் நடத்தப்பட்டது. மெல்ல தொழிற்புரட்சியின் காலம், புதிய கருவிகளுடனும், ஆட்சி நடத்த ஒருஜனநாயக அமைப்பு முறையுடன்அரும்பி வளர்ந்தது; புரட்சிஅதனுடன், “மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைகள் பிரகடனம்” என்ற ஒரு புதியஅம்சத்தைக் கொண்டு வந்தது. வரலாற்றில் முதன் முறையாக மனிதஉரிமைகள் அங்கீகரிக்கப்பட்டன. அது விடுதலைக்கான போராட்டத்தை ஒரு புதிய மட்டத்திற்குக் கொண்டு சென்றது.

இதேநேரத்தில் ஆர்எஸ்எஸ் – பாஜக ஆட்சியின் ஆண்டுவிழாவும் நடைபெறுகிறது, அத்தருணத்தில் பாஜக, “சேவா, ஜுஷான், கரீப் கல்யாண்” (சேவை, நல்லாட்சி மற்றும் ஏழைகள்நலம்) என்ற முழக்கத்தைப் பயன்படுத்துகிறது.

2014 மற்றும் 2019ல் நடைபெற்ற இரண்டு பொதுத் தேர்தல்களிலும் மோடிஅரசு சாதாரணமாக தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டின் மீது ஆர்எஸ்எஸ்சிந்தனை மற்றும் கருத்துகளைத் திணித்தது. ஆட்சியில் இருந்த சக்திகளுக்குஅரசியலமைப்புச் சட்டக்கோட்பாடுகள்,லட்சியவிழுமியங்கள் அன்னியமானவை, அதற்கு நெருக்கமானது நிதி மூலதனத்திற்கு ஆதரவாக இருப்பதே. பாஸ்டில் தகர்ப்புதொழிற்புரட்சி காலத்துடன் முதலாளித்துவ நிகழ்முறையின் தொடக்கமாக இருந்தது, அதுவே கார்ப்பரேட் மயமாக்குவதற்கு ஆதரவாகவும் இருந்தது.

அம்முறைமை(சிஸ்டம்)ஏனையமக்களின் விழைவுகளைப்பொருட்படுத்தாமல் அவர்கள் குரல்களை நெறித்துத் தானடித்த மூப்பாக, ஓய்வின்றிஅரசியலமைப்பு கோட்பாடுகளைப் பிய்த்தெறிவதில் ஈடுபட்டது. உழைக்கும் மக்களையும், மத, மொழி சிறுபான்மையினரையும் நசுக்கும் பெரும்பான்மைஆட்சிமுறைமையைக் கொண்டு வருவதே அவர்களின் பெருவிருப்பம்; மேலும் அதன்மூலம் இறுதியாக ஜனநாயக அமைப்பு முறைமைகளைச் சீரழித்துச் சட்டத்தின்ஆட்சியையும் மீறி தங்களின் இலக்கை அடைவது அவர்களின் நோக்கம்.

கார்ப்பரேட்டுகளுக்காக,அனைத்துஅதிகாரங்களையும் ஒன்றியத்தின் கைகளில் குவிக்கச் செய்து, எல்லாவித மத்தியகால பிற்போக்கு கருத்துகளையும் நடைமுறைக்குக்கொண்டு வருவது. அதன் மூலம், ‘கீழ்மட்ட’ சாதிகள் என அழைக்கப்படுவோர், பெண்கள்மற்றும் பொதுவாகச் செல்வத்தை உற்பத்தி செய்வதில்உழன்று ஆனால்அச்செல்வத்தை உரிமையாக வைத்திராத மக்கள் பிரிவுகளுக்கு இரண்டாம்தர அந்தஸ்தை வழங்குவது அவர்களின் திட்டம். இதனைச் சாதிக்க,அரசியலமைப்புச் சட்டத்தின் அனைத்து விதிகளையும் சாகடித்து ஓர்மை வார்ப்புஆட்சியாளர்களால் விதிகளை மாற்றி அமைப்பது அதற்குத் தேவையாக உள்ளது.

இத்தகைய ஆட்சியின் கீழ், பாஸ்டில் தகர்ப்புநிகழ்வுக்குப்பிறகுகொண்டுவரப்பட்ட சரித்திரப் புகழ் வாய்ந்த, “மனிதன் மற்றும் குடிமகனின்உரிமைகள் பிரகடனம்” அதனது மேன்மையான அர்த்தத்தை இழக்கிறது. கடந்த 9ஆண்டுகளில் மனித உரிமைகள் சீர்குலைக்கப்பட்டு தூக்கி எறியப்படுகின்றன. அதன்கொடூர உச்சம் மணிப்பூரில் பெண்களை நிர்வாணப்படுத்தி வீதிகளில் இழுத்துச்சென்ற காட்சிகளில் உலகத்திற்கு வெளிப்படுகிறது.இந்தியா விடியலுக்குக் காத்திருக்கிறது, “இந்தியா” விடைகாண களம்காண்கிறது ! மாற்றம் ஒன்றே மாறாதது, மாற்றம் மானுடத் தத்துவம் !

**தமிழில் : நீலகண்டன்**

# புதுச்சேரிக்கு மாநில தகுதி வழங்கப்படுமா?

## நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் எம்.பி. கேள்வி!



நாடாளுமன்ற மக்களவையில் கே சுப்பராயன் எம்.பி. எழுப்பியுள்ள கேள்விகள் பின் வருமாறு:

(அ) யூனியன் பிரதேசமாக உள்ள புதுச்சேரிக்கு மாநிலத் தகுதி வழங்குவது தொடர்பாக 1981 இல் இருந்து 2021 வரை உள்ள ஆண்டுகளில் புதுச்சேரி சட்டப்பேரவையில் 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பது பற்றி ஒன்றிய அரசு அறியுமா? அவை ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவா? ஆமெனில் அது குறித்த விவரங்களைத் தரவும்

(ஆ) புதுச்சேரிக்கு மாநிலத் தகுதி வழங்குவது குறித்து, நாடாளுமன்ற நிலைக்குழு ஏதேனும் பரிந்துரை செய்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், புதுச்சேரி மக்களின் உரிமைகளை முன்னிட்டு இந்தப் பணியை செய்வதற்கு ஒன்றிய அரசு முயற்சி எடுத்திருக்கிறதா? அது குறித்த தகவல்களை தரவும்

(அ) முதல் (இ) வரையிலான கேள்விகளுக்கு உள்துறை அமைச்சகத்தின் சார்பாக **துணை அமைச்சர் நித்யானந்த் ராய் தந்துள்ள பதில்:**

புதுச்சேரிக்கு தனி மாநில தகுதி வழங்குவது சம்பந்தமாக, புதுச்சேரி சட்டப்பேரவை அவ்வப்போது தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறது. உள்துறை விவகாரங்கள் சம்பந்தமான நாடாளுமன்ற நிலைக்குழுவும் புதுச்சேரிக்கு மாநில தகுதி வழங்கலாம் என அதனது 121வது அறிக்கையில் பரிந்துரை செய்திருக்கிறது. 19.07.2018 தேதியிட்ட தீர்மானம் இங்கு தரப்பட்டு, இந்த அமைச்சகத்தால் பரிசீலிக்கப்பட்டது. **தற்போதுள்ள நிலையே தொடரலாம் என முடிவு செய்யப்பட்டது**. அதற்குப் பிறகு புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவையில் இருந்து மாநிலத் தகுதி கோரி எந்த தீர்மானமும் இங்கு பெறப்படவில்லை

# நாடே வெட்கி தலைகுனி



ஜி.மஞ்சுளா

**மணிப்பூரில் இரண்டு குக்கி பழங்குடி பெண்கள் மெய்தெய் சமூக ஆண்களால் நிர்வாணப்படுத்தப்பட்டு ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டு கூட்டு பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட வீடியோக்கள் கடந்த வாரத்தில் வெளியாகிய போது அப்பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை கண்டு இந்தியா முழுவதும் அதிர்ச்சியில் ஆழ்ந்தது.**

அந்நிகழ்விற்கு கடும் கண்டனங்கள் தெரிவித்து பல்வேறு தரப்பினர் போராட்டங்கள் நடத்திவருகின்றனர். ஒன்றறை மாதங்களுக்கு முன் நடைபெற்ற இக்கொடுர நிகழ்வு இப்போது தான்வெளிஉலகிற்கு தெரிய வந்துள்ளது.

இந்த ஒரு சம்பவம் மட்டுமல்ல. கடந்த மே மாதம் 3ம் தேதியில் இருந்து 11 வாரகாலமாகஇது போன்று நடைபெற்று பாதிக்கப்பட்டுள்ள அனைத்து குக்கி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குநீதி வழங்க விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும் என 'மனித உரிமைகளுக்கான குக்கி மகளிர் அமைப்பு(KWOHR)' சுராசந்த்பூர் மாவட்டத்தில் உள்ளிருப்பு போராட்டத்தை நடத்திகுறிப்பாணையை சமர்பித்ததுள்ளது. இதன் நகலை பிரதமர் மற்றும் பல்வேறு ஆணையங்களுக்கும்அனுப்பியுள்ளது.

மணிப்பூரில் தற்போது ஆட்சியில் இருப்பது பாஜக ஆட்சி தான். பெண்கள் மீது திட்டமிட்டுவன்முறைகளை கட்டவிழுக்கும் குண்டர்களை உருவாக்கும் பாசிச பாஜக அரசிடமே தங்களைபாதுகாப்பதற்கான கோரிக்கைகளை முன்வைக்கும் நிலையில் இருப்பது தான் இன்றைய இந்தியபெண்களின் பெருந்துயரமாகும்.

6இருசமுகத்திற்கு இடையிலான மோதல் அல்லது பகை என்ற வகையில்மட்டுமே பெரும்பாலும் சித்திரிக்கப்பட்டு வருகின்றன. பாஜக விரும்புவதும் அதைத்தான்.இருதரப்பினருக்கும் இடையிலான மோதலாக மட்டும் பார்க்கப்படுவதும் இதன் பின்னால் உள்ளகார்ப்பரேட் அரசியல் மறைக்கப்படுவதும் பாஜகவிற்கு மிகுந்த அரசியல் இலாபம் தருவதாகும்.

அதை மீறி பாஜகவின் மக்களுக்கு எதிரான இந்த தந்திர அரசியலை யார்அம்பலப்படுத்தினாலும் அது பெரும் கோபமும் வன்மமும் கொண்டு அம்பலப்படுத்தியவர்களைதாக்குகிறது. இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் ஆனிராஜாஉள்ளிட்ட மூவர் மீது தேசதுரோகம்உள்ளிட்ட வழக்குகளைஇன்று மணிப்பூர் மாநில அரசுபோட்டிருப்பதற்கான காரணமும் அதுவே.

மணிப்பூரின் உண்மை நிலைகளை கண்டறிய ஆனிராஜா, நிஷாசித்து வழக்கறிஞர் தீக்ஷாதிவேதி ஆகியோரை கொண்ட உண்மையறியும் குழு கடந்த ஜுன் 28 முதல் ஜுலை 1 வரைமணிப்பூரின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று மெய்தி, குக்கி உட்பட பல்வேறு சமுகபெண்களையும் பார்த்தனர். பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள 3 நிவாரண முகாம்களுக்கும் சென்றுஉண்மை நிலையை கண்டறிந்தனர். அதை அறிக்கையாக உண்மையறியும் குழு வெளியிட்டது.

அந்த அறிக்கை மிகத் தெளிவாக ஒன்றை கூறியது. "மணிப்பூரில் நடந்து கொண்டிருப்பதுஇரண்டு சமூகத்திற்கு இடையிலான மதவன்முறையோ அல்லது சண்டையோ அல்ல. இது அங்குள்ள நிலம், வளங்கள் மற்றும் போராளிகள் பற்றியதாகும். பாஜக தனது கார்ப்பரேட் சார்புஅரசியலை நிறைவேற்ற சாதுரயமாக மேற்கொண்ட உத்திகளே இப்போதைய நெருக்கடிக்குகாரணம். மேலும் அங்கு நடைபெற்ற வன்முறை அரசின் ஆதரவோடு நடைபெற்றது"எனஅறிக்கை பாஜகவை வெளிப்படையாக குற்றம் சாட்டியது. பாஜக மேற்கொண்டநடவடிக்கைகளையும் பட்டியல் இட்டது.

தற்போது மெய்தேய் சமூகம் பட்டியல் இன பிரிவில்(SC) உள்ளனர். ஆனால் தங்களையும்பழங்குடியினராக(ST) அங்கீகரிக்க வேண்டும் என மெய்தேய் சமூக மக்கள் கடந்த 10 ஆண்டுகளாககோரி வருகிறார்கள். 'மெய்தேய் சமூகத்துக்கு பழங்குடி அந்தஸ்து வழங்குவது குறித்து மணிப்பூர்அரசு பரிசீரிலிக்க வேண்டும். அதற்கான பரிந்துரையை ஒன்றிய அரசுக்கு அனுப்ப வேண்டும்"எனமணிப்பூர் உயர்நீதிமன்றம் 2023,மார்ச் 27 அன்று தீர்ப்பளித்தது. அதுதான் தற்போதையமோதலுக்கான துவக்கபுள்ளி.

உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து 2023, மே3 அன்று அனைத்து பழங்குடியினர் மாணவர்கூட்டமைப்பு (ATSUM) ஒற்றுமை பேரணியை சுராசந்தபூர் மாவட்டத்தில் நடத்தியது. அன்றிலிருந்துமெய்தேய், குக்கி சமூகத்தினரிடையே நேரடியான மோதல்களும் வன்முறைகளும் நடைபெற்றுவருகின்றன. மெய்தேய் சமூகத்துக்கு பழங்குடி அந்தஸ்து பெற்று தருவோம் என்ற தேர்தல்வாக்குறுதியை அளித்துதான் பாஜக ஆட்சியில் அமர்ந்தது.

பழங்குடிகளாக மாறினால் குக்கிகள் வாழும் மலைபகுதியில் நிலம் வாங்கமெய்திகளுக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்பதால் மெய்தேய் சமூகம் பழங்குடியாக மாறநினைக்கிறார்கள் என சொல்லப்படுகிறது. அது பகுதியளவு தான் உண்மை. பழங்குடியானால்இடஒதுக்கீட்டில் வாய்ப்பு கிடைக்கும் என நினைக்கும் வேலையில்லாத பெரும்பான்மை மெய்திஇளைஞர்களை ஏமாற்றி தன்வசப்படுத்த பாஜக கையாண்ட அரசியல் தந்திரம் தான் இது.

மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தவறு என உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதிடி.ஒய்.சந்திரசூட் 7.05.23 அன்று தீர்ப்பளித்துள்ளார். "எந்த மாநிலத்திலும் எவரையும் பழங்குடியினர்பட்டியலில் சேர்ப்பதற்கான அதிகாரம் நீதிதுறைக்கு இல்லை என்று உச்சநீதிமன்றத்தின்அரசமைப்பு அமர்வு பல ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளது"என தனது தீர்ப்பில் அவர்சுட்டிகாட்டியுள்ளார். அதேபோல் மணிப்பூர் மக்கள் தொகையில் 53 விழுக்காடு உள்ள மெய்தேய்சமூகத்தின் பெரும்பான்மையானவர்கள் இந்துக்கள். வைணவத்தை பின்பற்றுகிறவர்கள். வேளாண்சமூகத்தினர். மேற்கூறிய உண்மைகள் அனைத்தும் பாஜகவிற்கு தெரிந்தது தான். ஆனால்கலவரத்தை தூண்ட இது நல்ல வாய்ப்பளிக்கும் என்பதால் தான் இத்தகைய தீர்ப்பை மணிப்பூர்நீதிமன்றம் வழங்கியுள்ளது.

குக்கிகளை பொருத்தவரை இந்த தீர்ப்புக்கு முன்னதாகவே அவர்கள் மீது பெரும்தாக்குதலை மாநில பாஜக அரசு துவங்கி விட்டது. மணீப்பூர் மாநில முதலமைச்சர் பைரோன்சிங்கின் பாஜக ஆட்சியில் கடந்த ஒராண்டாகவே குக்கி சோமி பழங்குடியின மக்களின்வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. காடுகளின் பாதுகாப்பு சட்டம் திருத்தப்பட்டு,அவர்கள் வாழ்ந்த வீடுகள் இடித்து தள்ளப்பட்டன.




2022 நவம்பரில் சுராசந்த்பூர் மற்றும் நோனி மாவட்டத்தில் உள்ள 38 கிராமங்களில்குடியேற்றத்துக்கான அங்கீகாரம் நீக்கப்பட்டது. ஆனால் அந்த 38 கிராமங்களில் 50 ஆண்டுகளுக்கும்மேலாக தாங்கள் வசித்து வருவதாகவும் ஒவ்வொரு கிராமத்திலும் 1000 பேருக்கு மேல் வசித்துவருவதாகவும் குக்கிகள் கூறுகின்றனர். கூகுள் மேப் மக்கள் குடியிருந்தற்கான படங்களைகாட்டவில்லை என்றெல்லாம் கூறி பழங்குடியினர் அவர்கள் வாழம் பகுதியில் இருந்துவெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

மலைவளங்களை கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு கொடுப்பதற்காகவே மணிப்பூர் அரசுதொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அதை எதிர்த்து ஆயுதம் ஏந்துவது உட்பட பலபோராட்டங்களை பழங்குடியின மக்கள் செய்து வருகின்றனர். தங்கள் நிலங்களை, வளங்களைபாதுகாக்க தான் அரசுக்கு எதிராக பழங்குடிகள் போராடி வருகின்றனர். ஆனால் அதைமடைமாற்றி பழங்குடிகள் கஞ்சா பயிரிடுகின்றனர் என்றெல்லாம் கூறி அவர்களின் பயிர்களைஅழிப்பது, ஆயுதக்குழுக்களின் தனிமாநில கோரிக்கைக்கான பேச்சுவார்த்தைகளை முறையாககையாளாதது, மெயிதேய் சமூகத்தை அவர்களுக்கு எதிரானவர்களாக மாற்றுவது என தொடர்ந்துதவறுகள் இழைத்து வருவது மணிப்பூர் மாநில அரசு தான்.

# மணிப்பூர் பிரச்சனையை விதி 267ன் கீ

கடந்த மூன்று மாதங்களாக மணிப்பூர் மாநிலத்தில் நடக்கும் கவலையளிக்கும் நிகழ்வுகள் குறித்து, மாநிலங்கள் அவையை நடத்துதல் மற்றும் வழிமுறை விதிகளில் உள்ள 267வது விதியின் கீழ் விவாதிக்க வற்புறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலங்களவை உறுப்பினரும் நாடாளுமன்றக் கட்சிக் குழு தலைவருமான பினாய் விஸ்வம், எம்பி அறிவிக்கை (நோட்டீஸ்) வழங்கி உள்ளார்.



பினாய் விஸ்வம், எம்பி

வன்முறை, கலகம், தீவைப்பு, கொள்ளையடித்தல் மற்றும் படுகொலை நிகழ்வுகளுடன் மணிப்பூர் நிலைமை மிகவும் நிலையில்லாததாக இருப்பது, நாடு முழுமைக்கும் மிகவும் கவலை அளிப்பதாகும். அதுவும் கேந்திரமான இடத்தில் அமைந்த மாநிலத்தை ஆழமான நெருக்கடியில் தள்ளிய பிரச்சனைக்கு, நூற்றுக்கணக்கானமக்களைப்பலிவாங்கி, பல்லாயிரம் மக்களை இடம்பெயரச் செய்த பிறகும், தீர்வு காணப்படாத நிலை கவலையை அதிகமாக்குகிறது. ஒன்றிய, மாநில அரசுகள் இரண்டும் மணிப்பூரில் வன்முறையையும் மோதலையும் கட்டுப்படுத்துவதில் தோல்வி அடைந்துவிட்டன, மாநிலத்தின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் நிலைகுலைந்துள்ளது. சமீபத்தில் நிவாரண முகாம்களுக்குச் சிபிஐ மற்றும் சிபிஐ(எம்) நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினருடன் பினாய்

# ...ரிய வைத்த மோடி அரசு

இரு சமூக மக்களின் மோதலாக மட்டும் இதை காட்ட எவ்வளவு தான் முயன்றாலும்,நிலைமைகளை பாஜக அரசு சரியாக கையாளவில்லை என்பதை தான் இரு தரப்பு சாமான்யமக்கள் முன்வைக்கின்றனர். அமைதிக்கான முயற்சியில் அவர்கள் ஈடுப்பட்டாலும் திட்டமிடப்பட்டஅரசு ஆதரவு வன்முறைகள்




முன் மக்களின் முயற்சிகள் வீணாகின என்பதை உண்மைசம்பவங்கள் காட்டுகின்றன.

மெய்தேய், குக்கி இரு சமூகங்களும் அருகருகே வாழ்ந்து வந்த சுகனு என்ற பகுதியில்மே 3ம் தேதி வன்முறை வெடித்த போது ஒருவருக்கொருவர் வன்முறையில் ஈடுபட மாட்டோம்என்ற சமாதன ஒப்பந்தம் கூட செய்திருக்கின்றனர். ஆனால் மே28 அன்று அங்கும் வன்முறைவெடித்து ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.வன்முறையில் இரு சமூக மக்களுமே தப்பி ஓடியிருக்கின்றனர். 7000 பேர் வசித்த அப்பகுதியில்தற்போது 1000 பேர் மட்டுமே வசிப்பதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

“ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் தவறான செயல்களை செய்யக் கூடாது. மனிதவாழ்க்கையை பொம்மை வாழ்க்கையாக கருதக் கூடாது.மத்தியிலும் மணிப்பூரிலும் பாஜக ஆட்சிதான் நடக்கிறது. இந்த இரண்டு அரசுகளும் ஏதாவது செய்ய முடியாதா?”வன்முறையில் தனதுமகனை இழந்த ஓய்வு பெற்ற இந்திய இராணுவ வீரர் சாய்கோம் ரானகேட்டின் கேள்வி இது.இவர் மெய்தேய் சமூகத்தை சார்ந்தவர். இம்பாலில் வாழ்ந்து வருபவர். இவரது மகன் ஷுபோல்மெய்தேய் சமூகத்தின் கிராமப் பாதுகாப்புக் குழுவில் தன்னார்வலராக பணியாற்றி வந்தவர். மெய்தேய்மற்றும்குக்கிசமூகத்தினிடையே வன்முறைகள் அதிகரிக்கும் பகுதிகளில் இந்தக்குழுக்கள் செயல்படுகின்றன. இம்பாலில் இருந்து சிறிது தொலைவில் உள்ள கடங்பண்ட்பகுதியில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் ஷுபோல் இறந்து விட்டார்.

பெண்களைப் பொருத்தவரை நிலை என்னவாக இருக்கிறது?

“நாங்கள் சாக விரும்பவில்லை. எங்களுக்கு குடும்பம் உள்ளது. தயவுசெய்து எங்களைகாப்பாற்றுங்கள்” என்கிறார் நிருபமா லைஷ்ராம். “மோடிஜியிடம் நான் என்ன கேட்கவிரும்புகிறேன் என்றால், நாங்கள் இந்தியர்கள் இல்லையா?”என கேட்கிறார் ரனிடா. இவர்கள்இருவருமே மெய்தேய் சமூக பெண்கள். “அமைதியாக அமர்ந்திருப்பதால் இந்த பிரச்சனைகளுக்குதீர்வு கிடைக்காது. மணிப்பூரில் நடக்கும் வன்முறைகளை மத்திய அரசும் மாநில அரசும்இணைந்து தான் சரி செய்ய முடியும். தீர்வு பற்றி சிந்தியுங்கள்”என மோடி எதுவும் கூறாததைபற்றிய வேதனையை இப்பெண்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

சுகானு கிராமத்தில் உள்ளூர் பெண்கள் பல்வேறு இடங்களில் அவர்களாகேவேவாகனங்களை சோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். “சிலர் துப்பாக்கிகள் கொண்டுசெல்கின்றனர். அனைவரின் பாதுகாப்பிற்காக தான் இதை செய்கிறோம்”எனமெய்தேய்சமூகபெண்கள் கூறுகிறார்கள் குக்கி சமூகத்தை சார்ந்தவர்கள் தங்களை தாக்குவார்கள் என்று இவர்கள்பயப்படுகிறர்கள். பல்லாண்டுகளாக குக்கியும் மெய்தேயும் சேர்ந்து வாழ்ந்த கிராமம் இது.

“நாங்கள் நடத்தப்பட்ட விதத்தின் அடிப்படையில் பார்த்தால் மணிப்பூர் அரசாங்கத்தின் ஒருபகுதியாக எங்களை எப்படி கருதுவது? நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்கள்எங்களை ஏற்கனவே அந்நியப்படுத்திவிட்டார்கள்” என மெய்தேய் சமூகம் மற்றும் மணிப்பூர் அரசின் செயல்பாடுகளை கடுமையாக விமர்சிக்கிறார் பழங்குடியின தலைவர்கள் மன்றஒருங்கிணைப்பாளர் மேரி ஜோன்ஸ். குக்கி சமூகத்தினர் அதிகம் வசிக்கும் சுராசந்த்பூர் பகுதியில்தனி நிர்வாகக் கோரிக்கைவலுத்துவருகிறது.“அதுஒருதனி மாநிலமாகவோ யூனியன்பிரதேசமாகவோ இருக்கலாம். பழங்குடியின மக்களுக்கான தீர்வுகளை நாங்களே ஏற்படுத்திக்கொள்வோம்”என்கிறார்கள் குக்கிசமூகப் பெண்கள்.

சுராசந்த்பூர் இம்பால் பள்ளத்தாக்கில் இருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. அன்றாடதேவைகளுக்கான பொருட்கள் மிசோரம் வழியாக நீண்ட பாதையில் கொண்டு செல்லப்படுகின்றன. மெய்தேய் சமூகத்தை சேர்ந்த மக்கள் தங்கள் ஆயுதமேந்திய கிராமப் பாதுகாப்புக்குழுவைஉருவாக்குவது போலவே சுராசந்த்பூரின் பல இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்தியிருக்கிறார்கள்.

மியான்மரில் இருந்து மணிப்பூருக்குள் நுழைந்தவர்களுக்கு இந்த வன்முறையில் பங்குஇருப்பதாகசமவெளிமக்கள்தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றனர். என்.ஆர்.சி சட்டத்தைநிறைவேற்றி மணிப்பூரில் சட்டவிரோதமாக நுழைந்தவர்களை அடையாளம் காணக்கோருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டை கடுமையாக மறுக்கிறார்கள் குக்கி சமூக மக்கள். “அவர்கள்எங்களை இந்தியர்களாக கருதவில்லை. வெளியாட்களாக கருதுகிறார்கள்.நாங்கள்மியான்மரை(பர்மா) சேர்ந்தவர்கள் என்று சொல்கிறார்கள். எங்கள் முன்னோர்கள் போரின் போதுஆங்கிலேயருடன் இங்கு இருந்தனர். நாங்கள் இந்த இடத்தின் பூர்வீக குடிமக்கள். அவர்கள்எங்களை எப்படி சட்டரோதமாக குடியேறியவர்கள் என கூறுவார்கள்?”என கொதிக்கிறார்கள் குக்கிசமூக மக்கள்.

நாட்டின் மக்களை பிளவுபடுத்த பாஜக எடுக்கும் ஒரு முயற்சி தான் தேசிய குடிமக்கள்பதிவேடு (என்.ஆர்.சி) என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். குக்கி சமூகமக்களுக்குஎதிராகஎன்.ஆர்.சிசட்டம் வேண்டும் என மெய்தேய் சமூக மக்கள் கேட்கின்றனர். ஆனால் அவர்கள்அஸ்திரம் இப்போது அவர்களையே திருப்பி தாக்கி விட்டது. குக்கிகள் மீதான வன்முறை மற்றும்தற்போது நிலவி வரும் பதட்டம் காரணமாக மற்றொரு வடகிழக்கு மாநிலமான மிசோரத்தில்வேலை செய்து வந்த மெய்தேய் சமூக மக்கள் 2000பேர் அங்கிருந்து வெளியேற வேண்டியநிலைமைக்கு இப்போது தள்ளப்பட்டு விட்டார்கள்.

பாஜக அரசின் பிரித்தாளும் கொள்கையால் எல்லா சமூக மக்களும் கடுமையாகபாதிக்கப்படுகிறார்கள் என்பதே யதார்த்தமாக உள்ளது. மணிப்பூர் முழுவதும் இரண்டுமாதகாலமாக



போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. இணைய வசதிநிறுத்தப்பட்டுள்ளது. முகாம்களில் அகதிகளாக ஆயிரக்கணக்கானோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.கர்ப்பிணி பெண்களும் இளம் பெண்களும் குழந்தைகளும் கடும் இன்னலுக்கு ஆளாகிவருகின்றனர். இயல்பு வாழ்க்கை முற்றிலும் நாசமாகி போர் காலங்கள் போல எந்நேரமும் உயிர்போகும் அபாயத்தில் அச்சத்தில் வாழும் நிலைமைக்கு பாஜக அரசு மணிப்பூர் மக்களை பெரும்இன்னலில் தள்ளிவிட்டு விட்டது.

இரண்டு பழங்குடியின பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரமான பாலியல்வன்கொடுமைகளோடு பிரச்சனை முடிந்துவிடவில்லை. அதைதவிர பல்வேறு இடங்களில்பழங்குடியின பெண்கள் கும்பல் பாலியல் வன்முறை செய்து கொல்லப்பட்டுள்ளதும் கொடூரமாககொலை செய்யப்பட்டுள்ளதுமான செய்திகள் தற்போது வந்தவண்ணமுள்ளன. இந்த கொலை,பாலியல் வன்முறை சம்பவங்களில் பெண்களும் நேரடியாக ஈடுபட்டுள்ளதும், கொடூரமாகசெயல்பட்டுள்ளதுமான அதிர்ச்சியூட்டும்தகவல்களும்வருகின்றன. கன்பா லூப், அரங்கைதெங்கோல் போன்ற மெய்தேய் இளைஞர் அமைப்புகள் இந்த கொடூரங்களில்சம்மந்தபட்டிருப்பதாகவும், இவற்றை ஆர்.எஸ்.எஸ் பின்நின்று இயக்குவதாக சொல்லப்படுகிறது.

அனைத்து கொடூரங்களும் மணிப்பூர் காவல்துறையின் முன்னணியிலும் அவர்கள்ஆதரவோடும் வன்முறை கும்பல்கள் ஈடுபட்டதும் இன்று வெளிச்சமாகியுள்ளது. “நான்மணிப்பூருக்கு செல்ல திட்டமிட்டிருந்த நிலையில் அம்மாநில அரசு எனக்கு அனுமதி மறுத்தது”என தில்லி மாநில மகளிர் ஆணையத் தலைவர் ஸ்வாதி மாலிவால் தெரிவித்துள்ளார்.

அரசே முன்னின்று நடத்திய வன்முறைகள் இவை எனஇந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் உண்மை அறியும் குழு வெளியிட்ட அறிக்கைக்குஆதாரமான செய்திகள் தான் இப்போது வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. கார்ப்பரேட்டுகளின்நலனைத் தவிர எந்த மக்களின் நலன்களும் பாஜகவுக்கு பொருட்டல்ல என்பதைதான் இவையனைத்தும் நிரூபிக்கின்றன.

ஒன்றுபட்ட மக்களின் போராட்டங்களை தீவிரப்படுத்துவது, பாஜகவின் கார்ப்பரேட்அரசியலை அம்பலப்படுத்துவது, இருசமூகங்கள் இடையேயான மோதல், ஆயுதம்தாங்கியபோராட்டக்குழுக்கள், தனிமாநிலக் கோரிக்கை போன்ற அரசியல்ரீதியான மணிப்பூரின்சிக்கல்களை மக்களுக்கு பாதகம் ஏற்படாமல் நிதானமாக கையாள்வது போன்ற அனைத்தும் மணிப்பூருக்கு மட்டுமல்ல. இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்திப் போவதுதான். ■

# ...கீழ் விவாதிக்க வேண்டும்: சிபிஐ எம்பி

விஸ்வமும் சென்று பார்வையிட்டார்; அங்கிருந்த பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடிய குழுவினர் மாநிலத்தில் அமைதி மற்றும் சட்டம் ஒழுங்கை மீண்டும் நிலைநாட்ட வேண்டிய தேவையை வற்புறுத்தினர்.

சிபிஐ மற்றும் சிபிஐஎம் எம்பிகளின் தூதுக் குழு மணிப்பூர் மக்களிடம் அவர்களின் குரலை நாடாளுமன்றத்தில் எழுப்புவோம் என்று உறுதி அளித்தனர். மக்களுக்கு அளித்த அந்தவாக்குறுதியைத் தொடர்ந்து பினாய் விஸ்வம் எம்பி நாடாளுமன்றத்தில் தற்போது அதற்கான நோட்டீஸ் வழங்கியுள்ளார்.

அந்த அறிவிக்கை, “அரசியல் நெருக்கடியை நன்கு புரிந்து கொள்ளவும், ஒன்றிய மாநில அரசுகள் எடுத்த முயற்சிகளைத் தெரிந்து கொள்ளவும், மணிப்பூரில் அமைதி மற்றும் இயல்புநிலையை மீண்டும் ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதைத் திட்டமிடவும் முழுமையான ஆழமான விவாதம் தேவை” என்று கூறுகிறது. உலக நாடுகளுக்கு விஜயம் செய்வதில் மும்முரமாக இருக்கும் பிரதமர், மணிப்பூர் மாநிலத்திற்குச் செல்லத் தவறியதுடன் மணிப்பூர் பற்றி ஒரு வார்த்தையும் உதிர்க்கக்கூட இல்லை என்று பினாய் விஸ்வம் மேலும் கூறினார்.

“வசுதைவத குடும்பகம்” (உலகமே ஒரு குடும்பம், மகா உபநிஷத் வாக்கியம்) அல்லது “ஒரு பூமி, ஒரு குடும்பம், ஓர் எதிர்காலம்” என்று ஜி20 அமைப்பு லட்சியமாகப் பெருமையுடன் அரசு விளம்பரம் செய்யும்போது, மணிப்பூரில் தங்கள் இருப்பிடங்களிலிருந்து பயந்தோடி இடம் பெயர்ந்த ஆயிரக் கணக்கான குடும்பங்களின் எதிர்காலம் குறித்து பிரதமரான அவர் மிக வசதியாக மறந்து விட்டார்.

விதி 267ன் கீழ் விவாதம் கோரி அளிக்கப்பட்ட நோட்டீஸில், மணிப்பூரின் அபாயகரமான நிலைமையை, கட்சி நிலைபாடுகளைத் தாண்டி விவாதிக்கவும் அந்த மாநிலத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மீண்டும் நிலைநாட்டும் வகையில் தீர்வினை ஏற்படுத்தவும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் அவர் கோரியுள்ளார்.

# எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையங்களை மூடக்கூடாது

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் 186 மையங்களை மூடுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிமாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் கீழ் தமிழகம் முழுவதும் 377 எச். ஐ. வி. பரிசோதனை நம்பிக்கை மையங்கள், அரசு மருத்துவக் கல்லூரி, அரசு மருத்துவமனைகள், நகர்ப்புற சுகாதார மையங்கள், மத்திய சிறைச்சாலை மருத்துவமனைகள், மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகளில் செயல்பட்டு வருகின்றன.

தற்போது தமிழகத்தில் 186 மையங்களை மூடவேண்டும் என தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்திற்கு சுற்றறிக்கைகளை அனுப்பியுள்ளன. உலகச் சுகாதார நிறுவனம் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு ஆலோசனை மையங்களையும் பரிசோதனைக் கூடங்களையும் அதிகரிக்க வேண்டுமென வழிகாட்டியுள்ள சூழலில் ஒன்றிய அரசின் மேற்கண்ட முடிவு அதிர்ச்சியளிக்கிறது.

எச். ஐ. வி. பரிசோதனை மற்றும் ஆலோசனை மையங்களை மூடினால் தமிழ்நாட்டில் எய்ட்ஸ் கட்டுப்பாடு திட்டம் முற்றிலும் முடங்கும் அபாயம் ஏற்படும். மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் தொய்வும், எய்ட்ஸ் தொற்றாளிகளுக்கு கிடைக்கும் ஆலோசனைகளும், உதவிகளும் கூட தடைபடும்.

அத்துடன், தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆலோசனைகளை ஏற்றால் 20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வரும் 2500 தொழிலாளர்களின் வேலை பறிபோகும் சூழலும் ஏற்படும்.

எனவே தமிழக அரசின் நல்வாழ்வுத் துறையின், மருத்துவத்துறையின் சிறந்த மருத்துவ சேவைகளை, நோக்கங்களை சிதைக்கிற ஒன்றிய அரசின் தவறான போக்குகளுக்கு இடமளிக்க கூடாது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு தனதுஅறிக்கையில் கூறியுள்ளார்.

# திருப்பூர் பின்னலாடை தொழிலை பாதுகாக்க உடனடி நடவடிக்கை தேவை

## நாடாளுமன்றத்தில் கே. சுப்புராயன் எம்.பி. பேச்சு

திருப்பூர் பினலாடை தொழிலை பாதுகாக்க உடனடி நடவடிக்கை தேவை என்று திருப்பூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் கே.சுப்பராயன் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி பேசினார்.

நாடாளுமன்ற மக்களவையில் 20.07.2023 அன்று விதி எண் 377ன் கீழ் கே. சுப்பராயன் பேசியதாவது:

திருப்பூர் பின்னலாடை தொழில் முன்னெப்போதும் காணாத பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகிறது. ஏறத்தாழ பாதிக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டன. பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி, விண்ணை முட்டும் விலையேற்றம், மின் கட்டண உயர்வு இன்ன பிற காரணங்களால் தான் அவை மூடப்பட்டன.

திருப்பூர் பின்னலாடை தொழிலின் மையமாகத் திகழ்வதுடன், ஐந்து கண்டங்களுக்கு ஏற்றுமதியும் செய்கிறது. திருப்பூர் தொழில்துறை கணிசமான அந்நிய செலாவணியை ஈட்டித் தருகிறது. பல மாநிலங்களில் இருந்து புலம்பெயர்ந்து வந்துள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் தொழில் மையமாகவும் இருக்கிறது. தொழில் நிறுவனங்கள் மூடப்படுவதால், குறிப்பாகச் சொல்வதானால், ஆயிரக்கணக்கான சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் மூடப்படுவதால் திருப்பூரின் சமூக பொருளாதார நிலை மிகவும் மோசமான பின்னடைவைச் சந்தித்து வருகிறது.

திருப்பூர் பின்னலாடை தொழிலைப் பாதுகாத்திட உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசாங்கத்தை நான் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

# தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடுகள்

### கிருஷ்ணகிரி மாவட்டம்

கிருஷ்ணகிரி மாவட்ட பேரவை கூட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் எஸ். கண்ணு தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை கட்சியின் மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி கொடியேற்றி துவக்க உரையாற்றினார். மாநாட்டை வாழ்த்தி விவசாய சங்கத்தின் தலைவர் சிவராஜ் பேசினார். வேலை அறிக்கையை மாவட்ட செயலாளர் சேகர் முன்மொழிந்தார். எஸ். கண்ணு மாவட்ட தலைவராகவும், ரா. சேகர் மாவட்ட செயலாளராகவும் என். கிருஷ்ணமூர்த்தி துணைத்தலைவராகவும், எஸ். ராமமூர்த்தி துணை செயலாளராகவும், ஆர். சக்கரவர்த்தி பொருளாளராகவும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.


திருப்பத்தூர்

### திருப்பத்தூர் மாவட்டம்

விவசாய தொழிலாளர் சங்கத்தின் திருப்பத்தூர் மாவட்ட பேரவை கூட்டம் வி. பி. சிங் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. பேரவை கூட்டத்திற்கு மூத்த தோழர் ஏ. சி. சாமிக்கண்ணு தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சுந்தரேசன் வாழ்த்துரை வழங்கினார். பா . தினேஷ் மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் சிறப்புரை ஆற்றினார். நந்தி சி. பி. ஐ. மாவட்ட துணை செயலாளர் நன்றி உரை கூறினார். மாவட்ட தலைவராக பழனி, செயலாளராக எம். ஜி. தேவராஜ் உள்ளிட்ட 17 பேர் கொண்ட மாவட்ட குழு அமைக்கப்பட்டது.

### திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்ட மூன்றாவது மாநாடு செங்குன்றத்தில் நேதாஜி சிலை அருகில் இருந்து பேரணியாக புறப்பட்டு வண்ணை பி. சந்திரசேகர் நினைவு அரங்கை வந்தடைந்தது. மாவட்ட தலைவர் டி.கே. ராஜா, சி.சுப்பிரமணி, கே.வி. செங்கொடி செல்வன் தலைமை தாங்கினர். துணைத் தலைவர் கே.போஸ் கொடியேற்றி வரவேற்புரையாற்றினார். எம்.பி.குமார் அஞ்சலி தீர்மானத்தை முன்வைத்தார்.

மாநாட்டை தொடங்கி வைத்து இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.கஜேந்திரன் உரையாற்றினார். இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பி.வி. செந்தில், கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் சி.மாரி, டாஸ்மாக் பணியாளர் சங்க மாவட்ட செயலாளர் தாமோதரன் ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினர்.

மாவட்டத் தலைவராக டி. கே. ராஜா, துணை தலைவராக கே. போஸ், சி. சுப்பிரமணி, வி. அகல்யா. மாவட்ட செயலாளராக என். எஸ். பிரதாப் சந்திரன், துணைச் செயலாளர் எம். பி. குமார், பிரபாகரன், மதியழகன் பொருளாளராக வி. சரவணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.


திருவள்ளூர்

### கள்ளக்குறிச்சி மாவட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்ட முதல் மாநாடு மாநில நிர்வாக குழு உறுப்பினர் கே.எஸ். அப்பாவு தலைமையில் நடைபெற்றது. மாநிலதுணை தலைவர் வி. பி. பழனிசாமி கொடியேற்றி, மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மாநில செயலாளரும் திருத்துறைப்பூண்டி ஒன்றிய குழு பெருந்தலைவருமான அ. பாஸ்கர் புதிய நிர்வாகிகளை வாழ்த்தி சிறப்புரை ஆற்றினார். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் கே. இராமசாமி, மாவட்டத்தின் வெகுஜன அரங்க நிர்வாகிகளை வாழ்த்தி பேசினார். புதிய நிர்வாகிகளாக தலைவர் கே. முருகேசன், செயலாளர் கே. எஸ். அப்பாவு, பொருளாளர் ஏ. பால்ராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட துணை தலைவர் கபில்தேவ்குமார் தீர்மானங்களை வாசித்தார். கூட்டத்தில் ஏஐடியூசி மாநில நிர்வாக குழு ஆ. வளர்மதி, மாவட்ட குழு எம். கலியபெருமாள், பழங்குடி மக்கள் மாநிலத் துணைச் செயலாளர் ஆர். சின்னசாமி, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் கள்ளக்குறிச்சி ஒன்றிய செயலாளர் ரீதா நன்றி கூறினார்.

### செங்கல்பட்டு மாவட்டம்

செங்கல்பட்டு மாவட்ட 5 வது மாநாடு பெருக்கரனை பி. எஸ். எல்லப்பன் தலைமையில் நடைபெற்றது. சங்க கொடி யினை இந்திய கம்யூனிஸ்டு கட்சி மூத்த தலைவர் எல். மேகநாதன் ஏற்றிவைத்தார். இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் ஏ. ராஜ்குமார் துவக்கவுரை ஆற்றினார். மாவட்ட துணை செயலாளர் இ. பாலாஜி, இளைஞர் பெருமன்றம் மாவட்ட தலைவர் கேவி. சேகுவேராதாஸ் வாழ்த்துரை வழங்கினார். 19 பேர் கொண்ட மாவட்ட குழு தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட தலைவராக பி. எஸ். எல்லப்பன், மாவட்ட செயலாளராக பி. எஸ். ராமலிங்கம், மாவட்ட பொருளாளராக கே. ராமதாஸ், மாவட்ட துணை தலைவராக ஐ. ஆர். அன்புவீராசாமி, துணை தலைவராக பி. துரை, மாவட்ட துணை செயலாளராக பிலாபூர் கி. கதிர்வேல், துணைசெயலாளராக எஸ். எஸ். வாசன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.


கள்ளக்குறிச்சி

# உள்ளாட்சி சுகாதார பணியாளர்கள் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்


ஈரோடு

தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் பணியாற்றும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வேலையை, ஊதியத்தை, வாழ்க்கையை பறிக்கும் ஒப்பந்த தொழிலாளர் முறையை கைவிட வேண்டும், தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் தொழிலாளர் விரோத அரசாணையை ரத்து செய்ய வேண்டும், 480 நாட்கள் பணியாற்றிய தொழிலாளர்கள் அனைவரையும் சட்டப்படி நிரந்தரப்படுத்த வேண்டும், 2017 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தை குறைத்து கடந்த 16.07.2023 அன்று வெளியிடப்பட்ட அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடுமுழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### செங்கல்பட்டு

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிமுன்பு பெரும்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் ஆர். தேவராஜன் தலைமை தாங்கினார். ஏ. ஐ. டி. யு. சி. மாவட்ட பொதுச்செயலாளர் எம். ஜஹாங்கிர் துவக்கி வைத்தார் . மாநில தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன் சிறப்புரை ஆற்றினார். மாநில பொதுச் செயலாளர் எம் . ராதாகிருஷ்ணன் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து நிறைவுரையாற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிமாவட்ட செயலாளர் ஏ. ராஜ்குமார், ஏஐடியுசிமாநில பொருளாளர் என். சங்கையா , மாவட்ட ஆட்டோ சங்க செயலாளர்கா. ஜெகதீசன், அமைப்பு நிலை செயலாளர் பி.ரவிச்சந்திரன் கண்டனவுரையாற்றினர்.மாநகராட்சி ஆணையர் மூலம் முதலமைச்சருக்கு மனு அளிக்கப்பட்டது.

### கோவை

கோயம்புத்தூர் மாவட்ட ஏ. ஐ. டி. யு. சி. தூய்மை பணியாளர் சங்கம் சார்பாகசங்கத்தின் மாவட்ட பொறுப்பாளர் ஜி. பி. சக்திவேல் தலைமையில், கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், தமிழ் நாடு ஏ. ஐ. டி. யு. சி. மாநில செயலாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட பொதுச் செயலாளர் சி.தங்கவேல், மாவட்ட கவுன்சில் செயலாளர் கே.எம்.செல்வராஜ், சி.சிவசாமி, எம்.சண்முகம், மாவட்ட துணை தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்ட ஊரக உள்ளாட்சி சுகாதார பொது பணியாளர்கள் சங்கம் ஆர்ப்பாட்டம். தலைமை இ. சம்பத், மாவட்டத் தலைவர். ஏ. ஐ. டி. யு. சி. காஞ் சிபுரம் மாவட்ட தலைவர் பீட்டர், காஞ் சிபுரம் மாவட்ட பொதுச்செயலாளர் ஆ. மூர்த்தி, மாதர் சங்க தலைவர் தி. ரேணுகாதேவி, மாவட்டத் துணைச் செயலாளர் எல். தங்கராஜ் ஆகியோர் கண்டனவுரையாற்றினர். மாநகராட்சி நிர்வாகமே குறைந்தபட்ச ஊதியம் 725 ரூபாய் ஏப்ரல் 2023 முதல் வழங்கு, மாதந்தோறும் முதல் தேதி சம்பளம் வழங்கு உள்ளிட்ட முழக்கங்கள்எழுப்பப்பட்டன.

### நாமக்கல்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அண்ணா சிலை முன்பு நாமக்கல் மாவட்ட ஏஐடியுசி சார்பில் தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன்தலைமையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.அன்புமணிஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார்.

ஏஐடியுசிமாவட்ட பொதுச்செயலாளர்பி. தனசேகரன், ஏஐடியுசி மாவட்ட வெளியீட்டு செயலாளர்எஸ்.ராமகிருஷ்ணன்,ஏஐடியுசி மாவட்ட பரப்புரை செயலாளர்சி. ஜெயராமன்,ஏஐடியுசி ஆட்டோ சங்கத் தலைவர்பி.கே.சுப்பிரமணி,சிபிஐ நகர செயலாளர்எஸ்.சுகுமார்,சிபிஐ ஒன்றிய செயலாளர்பி.எஸ்.முனுசாமிஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

### அரியலூர்

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் நகராட்சி அலுவலகம் முன்பு நகராட்சி சங்க மாவட்டத் துணைத் தலைவர் ம.சிலம்பு செல்வி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி உள்ளாட்சித் துறை பணியாளர் சம்மேளன மாநில செயலாளர் த. தண்டபாணி பங்கேற்று சிறப்புரையாற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சொ. இராமநாதன் வாழ்த்தி பேசினார். முடிவில் நகராட்சி நிர்வாகத்தில் முதலமைச்சருக்கான விண்ணப்ப மனு அளிக்கப்பட்டது. மாலை யில்அரியலூர் பழைய நகராட்சி அலுவலகம் எதிரே நல்லசாமிதலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### திருச்சி

திருச்சி மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகம் அருகில் திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏஐடியுசி சங்கம் சார்பில் முருகன்தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏஐடியுசி சங்கம் மாவட்ட தலைவர் இந்திரஜித் , மாவட்ட செயலாளர் சுப்ரமணியன் , ஏஐடியுசி மாவட்ட செயலாளர் சுரேஷ் சி.பி.ஐ. புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார் மாநகர் மாவட்ட செயலாளர் சிவா கட்டுமான சங்க மாவட்ட செயலாளர் செல்வகுமார் ஆகியோர் உரை நிகழ்தினர்.

### தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத் தலைவர் வெ.சேவையா தலைமை வகித்தார். ஏஐடியுசி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார், மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன், மாவட்ட செயலாளர்கள்துரை.மதிவாணன், ஆர்.பி.முத்துக்குமரன், மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர்உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கும்பகோணம் மாநகராட்சி முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம் தலைமைவகித்தார். சங்க நிர்வாகிகள் வழக்கறிஞர் மு.அ.பாரதி, கோ.மணிமூர்த்தி, சுந்தரராஜன், நாராயணன் கலந்து கொண்டனர். பட்டுக்கோட்டை நகராட்சி முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்க நிர்வாகி கே.செல்வராஜ் தலைமை வகித்தார்.

### திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் மணியன் தலைமை ஏற்றார். நண்பா முத்துகிருஷ்ணன், கலைமுருகன், சந்தனமுத்து மற்றும்தூய்மை காவலர்கள் சங்கம் மாநில துணைசெயலாளர் பரமசிவன், அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்கத் தலைவர் ரெங்கன், திருநெல்வேலி மாவட்ட ஏஐடியூசிபொதுசெயலாளர் சடையப்பன் ஆகியோர் கோரிக்கையை வலியுறுத்தி உரையாற்றினர்!

### ஈரோடு

ஈரோட்டில் வீரப்பன் சத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்றஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் தலைவரும், ஏஐடியுசி மாநிலச் செயலாளருமான எஸ்.சின்னசாமி தலைமை வகித்தார். சங்கத்தின் துணைச் செயலாளர் ஆர்.ஞானசேகரன், துணைத்தலைவர் எஸ்.மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஏஐடியுசி மாவட்டத் துணைத் தலைவர் டி.ஏ.செல்வம், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் எம்.குணசேகரன், சிஐடியு மாவட்டத் தலைவர் எஸ்.சுப்ரமணியன், எல்எல்எப் மாவட்ட செயலாளர் எஸ்.எஸ். காளியப்பன், எல்எல்எப் மாவட்டச் செயலாளர் பி.ஆனந்தன், ஈரோடு மாவட்ட வங்கி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ஆர்.நரசிம்மன், தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்க தெற்கு மாவட்ட செயலாளர் எம்.பாபு உள்ளிட்டோர் உரையாற்றினர்.

### தர்மபுரி

தருமபுரி மாவட்ட முனிசிபல் பஞ் சாயத்து, பொது பணியாளர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பொது பணியாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ராமமூர்த்தி, உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் மனோகரன் தலைமை வகித்தனர்.மாவட்ட செயலாளர் புகழேந்தி,ஏஜடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி,மாவட்ட துணை தலைவர் ஏ.முருகேசன் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

### தேனி

ஆண்டிபட்டி பேரூராட்சி அலுவலகம்முன்பு கண்ணீர் வடித்துமாரடித்து அழும்போராட்டம் வார்டு கவுன்சிலர் மீனாட்சி முனீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணிதுவக்கி வைத்தார். மாவட்ட துணை செயலாளர்வே. பரமேஸ்வரன்முடித்து வைத்தார். நகர செயலாளர்க.முனீஸ்வரன்கண்டன உரையாற்றினார்.


செங்கல்பட்டு


கோவை

ஆக.–9 சென்னையில் பெருந்திரள் அமர்வு

# அனைத்து தொழிற்சங்க சென்னை மாவட்ட தயாரிப்பு மாநாடு

சென்னை மாவட்டங்களின் அனைத்து தொழிற்சங்க மாநாடு உழைக்கும் மாமன்றம் கருத்துரிமை அரங்கத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு உழைக்கும் மாமன்ற தொழிலாளர் சங்கத்தின் சம்பத் தலைமை தாங்கினார்.ஏ. ஐ. டி. யு. சி. மத்திய சென்னை மாவட்ட பொதுச் செயலாளர் மு. சம்பத் வரவேற்புரையாற்றினார். தொழிற்சங்கங்களின் 14 ஆம்ச கோரிக்கைகளை விளக்கி உழைக்கும்மாமன்றதொழிலாளர் தலைவர் இரா. குசேலர், ஏ.ஐ.டி. யு. சி. மாநில துணைத்தலைவர் ஏ. எஸ். கண்ணன்,சிஐடியு மாநில துணைச் செயலாளர் திரு வேட்டை உள்ளிட்டோர் உரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் ஏஐடியூசிமாநில செயலாளர் ஏ. பாஸ்கர், கட்டட தொழிலாளர் சங்க மாநில செயலாளர் இரா. துரைசாமி,ஏ. ஐ. டி. யு. சி. வடசென்னை மாவட்ட பொதுச் செயலாளர் எ. அருள் ,தென் சென்னை மாவட்ட பொதுச் செயலாளர் அழகேசன் ,தோழர்கள் எஸ். குப்பன், ப. மாரியப்பன், சீனிவாசன், ரவி, காமாட்சி, ஐ சி எப் சரவணன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.



# கட்டட தொழிலாளர் சங்க காஞ்சிபுரம் மாவட்டப் பேரவை

தமிழ்நாடு ஏ ஐ டி யு சி கட்டட தொழிலாளர் சங்கத்தின் காஞ்சிபுரம் மாவட்டம் அமைப்பு கூட்டம் ஏ. ஐ. டி. யு. சி. மாவட்ட பொதுச் செயலாளர் ஏ. மூர்த்தி தலைமையில்நடைபெற்றது.

ஏ. ஐ. டி. யு. சி. மாநிலச் செயலாளர் வி. ஆதிமூலம் துவக்க உரையாற்றினார். கட்டட தொழிலாளர் சங்கத்தின் வரலாறு, நடத்திய போராட்டங்கள், பெற்ற உரிமைகள், வாரிய பலன்கள் உள்ளிட்ட விபரங்களை மாநிலச் செயலாளர் இரா. துரைசாமி விளக்கி பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் காஞ்சிபுரம் மாவட்ட துணை செயலாளர் சீனிவாசன், காஞ்சிபுரம் தொகுதி குழு செயலாளர் ஜே. கமலநாதன், மாதர் சங்க நிர்வாகிகள் மீனா உஷா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் பா கார்த்திக் நிறைவுறை ஆற்றினார்.

மாவட்ட தலைவராக ஏ. மூர்த்தி, மாவட்டச் செயலாளர் எஸ். கருணா, மாவட்ட பொருளாளர்டி. சேகர், துணைத்தலைவர்களாக ஞானசேகரன், நவநீதம், துணைச் செயலாளராக ஜே. வெங்கடேசன், வீ. சரஸ்வதி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர் .நிறைவாக கருணா நன்றி கூறினார்.

# மாணவர்களுக்கு அரசியல் சார்பு கூடாதா?

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம்

மாணவர்களுக்கு அரசியல் சார்பு கூடாதா? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம்

சென்னை பல்கலைக் கழகத்தின் சமூகவியல் துறை, சமூகவியல் முதுநிலை இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில் “மாணவர்கள் அரசியல் கட்சிகள் சார்ந்த எந்தவொரு அமைப்பு மற்றும் சங்கங்களில் உறுப்பினராக இருக்கக் கூடாது” எனவும், “அப்படி மாணவர்கள் ஈடுபட்டால் உடனே, கல்வி பெறும் வாய்ப்பில் இருந்து நீக்கலாம் என துறைத் தலைவருக்கு அதிகாரமளித்தும்” உள்ளது.

இது மாணவர்களின் கருத்துச் சுதந்திரத்தை பறிக்கும் செயலாகும். அரசியல் அமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமையை மதிக்காமல் செயல்பட்டுள்ள இச்சுற்றறிக்கையை வெளியிட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கவும், சுற்றறிக்கையை திரும்பப் பெறவும் சென்னை பல்கலைக் கழக துணைவேந்தரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வலியுறுத்துகின்றது.

# தியாகி சுப்பிரமணிய சிவாவின் 98வது நினைவு நாள்



விடுதலை போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் 98வது நினைவு நாளையொட்டி, அவரது நினைவிடத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில் மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

கட்சி மாவட்ட துணை செயலாளர் எம். மாதேஸ்வரன் தலைமையில், பாப்பாரப்பட்டி வட்டார செயலாளர் பெருமாள்,மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் புள்ளாறு,மாவட்டக்குழு உறுப்பினர் குழந்தைவேலு,ஏஐடியூசி மாவட்ட துணைத் தலைவர் ஏ.முருகேசன், கட்டட சங்க மாவட்ட செயலாளர் ஏ.சி.மணி,ஆட்டோ மாவட்ட செயலாளர் கந்தசாமி, முன்னாள் கவுன்சிலர் செல்வம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வினாடி வினா விடைகள்

1. 1983 ஜுலை 23
2. அமெரிக்க பத்திரிகையாளர் ஜான் ரீடு
3. 1927 மார்ச் 20 டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்
4. 1951–52
5. நான்கு இலக்கங்கள்
6. காரல் மார்க்ஸ்

# திருப்பி செலுத்தாத கடன் தள்ளுபடி குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடுக!

## பி. சந்தோஷ் குமார் எம்.பி. கடிதம்

வங்கிகளின் திருப்பி செலுத்தாத கடன் தள்ளுபடி குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி. சந்தோஷ் குமார், நிதியமைச்சருக்கு கடிதம்.

இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட வசூலாகாத வங்கிகளின் கடன் 2023 ல் 2,09,144 லட்சம் கோடி ஆகும். கடந்த 5 ஆண்டுகளில் திருப்பி செலுத்தாத வங்கி கடன்கள் தள்ளுபடி மட்டும் 10.57 லட்சம் கோடி ஆகும். அந்த ஆதாரத்தின்படி இவ்வளவு பெரிய தொகை தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது வெளிவந்துள்ளது.

இந்திய வங்கிகள் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கான கருவியாக செயல்பட்டு வருகின்றன. இப்படிபட்ட நிலையில் மக்கள் பணத்தில் பெரும் தொகை தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது கவலைக்குரியது. வேண்டுமென்ற கடனை கட்டாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்காதவர்கள் இப்படி செயல்படுவது சரியானதல்ல. அதேநேரத்தில் ஏழை விவசாயிகளிடத்தில் கடனை திரும்ப பெற சட்டப்படி பயமுறுத்தி வசூலிப்பதைப் போல ஏன் நடவடிக்கைகள் மேற்கொள்வதில்லை?

வங்கி தொழில் தொடர்ந்து நடைபெற, கடன்களை திருப்பி செலுத்துவது அவசியமானது. அந்த தொகைகளை தள்ளுபடி செய்வது அநீதியானது, பாதுகாப்பற்றது. எனவே, இது குறித்து அனைவரும் அறியும் வகையில் தேசியமயமாக்கபட்ட வங்கிகளில் தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகைகள் குறித்த வெள்ளை அறிக்கையை உடனடியாக வெளியிட வேண்டுமென ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மணிப்பூரை பாதுகாப்போம்! வெறுப்பரசியலை வேரறுப்போம்!!

## இளைஞர் பெருமன்றம் சார்பில் அஞ்சல் அட்டை, இ.மெயில் அனுப்பும் போராட்டம்




மணிப்பூரில் கடந்த இரு சமூக குழுக்களிடையே மோதல் ஏற்பட்டு, தொடர்ந்து வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இது இந்திய நாட்டிற்கு ஏற்பட்ட மிகப்பெரிய அவமானமாகும். இதற்குக் காரணம் பாஜக அரசே! மத்தியிலும் பாஜக, மணிப்பூர் மாநிலத்திலும் பாஜக அரசு தான்.

பி.ஜே.பி அரசினை எதிர்த்து ஜுலை 24 முதல் ஆகஸ்ட் 2 வரை, இந்தியா முழுவதும் அனைத்து வட்டார, ஒன்றிய தலைநகரங்களிலும் போராட்டம் நடைபெற்று வருகிறது.

அஞ்சல் அட்டை மற்றும் இ.மெயில் அனுப்பும் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் கள்ளக்குறிச்சி திருக்கோவிலூரில் நடைபெற்ற போராட்டத்திற்கு மாவட்டசெயலாளர் எஸ். விஜய் தலைமை தாங்கினார்.

மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர். கணேசன் முன்னிலை வகித்தார். மாநிலசெயலாளர் க.பாரதி கலந்து கொண்டு கண்டனவுரையாற்றினார்.

திருவாரூரில் அரைநிர்வாணப்போராட்டம் நடைபெற்றது. மாநிலத் துணைச்செயலாளர். துரை. அருள்ராஜன் தலைமை தாங்கினார்.

வடசென்னையில் மாவட்ட செயலாளர் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் மாநிலத்தலைவர். த. கு. வெங்கடேசன் கண்டனவுரை யாற்றினார். நாகப்பட்டினத்தில் மாவட்டசெயலாளர் சந்திரமோகன் தலைமையில் போராட்டம் நடைபெற்றது.

மதுரை புறநகரில் மாவட்டசெயலாளர் கே. கிருஷ்பாக்கியம் தலைமையிலும், சேலத்தில் நடைபெற்ற போராட்டத்திற்கு மாவட்டசெயலாளர் இரா. ரமேஷ் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்ற மாநிலசெயலாளர் பா. தினேஸ் கண்டனவுரையாற்றினார்.

தேனியில் மாநிலத்துணைச்செயலாளர் இரா. தமிழ்பெருமாள் தலைமையில், புதுக்கோட்டையில் மாநிலத்துணைத்தலைவர் கு. ராஜேந்திரன் தலைமையிலும், வேலூரில் மாவட்டசெயலாளர் மகேஷ் தலைமையிலும், தென்சென்னையில் மாவட்டசெயலாளர் மைக்கேல் தலைமையிலும் போராட்டம் நடைபெற்றது. திருச்சி மாநகரில் உண்ணாவிரதப்போராட்டம் மாவட்ட செயலாளர் எம். செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது.

மேலும் ஆகஸ்ட் 2 வரை அஞ்சல் அட்டை மற்றும் இ.மெயில் அனுப்பும் போராட்டத்தை நடத்த இருக்கிறார்கள்.

# விவசாய தொழிலாளர் சங்க ஈரோடு வடக்கு மாவட்ட முதல் மாநாடு

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் ஈரோடு மாவட்ட (வடக்கு) முதல் மாநாடு, கோபி,சீதா கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.



கோபி அ. கு. பரமேஸ்வரன், பவானி கண்ணன், பவானிசாகர் பூங்கொடி ஆகியோர் தலைமை தாங்கினர்.

மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் ஜி. வெங்கடாசலம் மாநாட்டு கொடியினை ஏற்றிவைத்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ். மோகன் குமார் மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடக்கு மாவட்ட துணைச்செயலாளர் கே. சக்திவேல்,மாநிலக்குழு உறுப்பினர் டி. ஏ. மாதேசுவரன், மாணவர் மன்ற மாவட்டச் செயலாளர் கே. பிரபு, பழங்குடி மக்கள் சங்கத்தலைவர் வி. பி. குணசேகரன்,பி. வ. பாலதண்டாயுதம், வங்கி ஊழியர் சங்கத் தலைவர் கணேஷ், ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப்பேசினர்.

மாநாட்டில்,மாவட்ட சங்கத்தின் தலைவராக அ. கு. பரமேசுவரன், மாவட்ட சங்கத்தின் செயலாளராக சி. கே. முருகன்,மாவட்ட சங்கத்தின் பொருளாளராக எஸ். பூங்கொடி அகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளலரும், சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலாளருமான நா. பெரியசாமி மாநாட்டை நிறைவு செய்து சிறப்புரையாற்றினார்.

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில செயலாளர்
# பி.எஸ். மாசிலாமணி தலைமையிலான குழுவினர் காவிரி ஆணைய தலைவருடன் சந்திப்பு



தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி தலைமையில் தமிழ்நாட்டில் இருந்து சென்ற குழுவில் விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் மு.சேரன்,நாகை மாவட்ட செயலாளர் ஆர். கே.பாபுஜி, தஞ்சை மாவட்ட செயலாளர் சாமு.தர்மராஜ் மற்றும் நிர்வாகிகள் டெல்லியில் 25.7.2023 அன்று காவிரி மேலாண்மை ஆணைய தலைவர் எஸ்.கே. ஹல்தர் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்து பேசினோம். இதற்கான ஏற்பாடுகளை நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம். செல்வராஜ் அவர்கள் செய்து, பங்கு கொண்டு, இந்த கோரிக்கைகளை வலியுறுத்தினார். ஆணையத்தின் செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் பங்கு கொண்டனர்.

ஜுன் ஜூலை மாதம் தமிழ்நாட்டிற்கு கொடுக்க வேண்டிய தண்ணீரை ஆகஸ்டு இறுதிக்குள் கொடுத்து விடலாம் என கூறியதை நாங்கள் மறுத்து ஜூலை இறுதிக்குள் திறக்க வலியுறுத்தியதை பரிசீலிப்பதாக தலைவர் கூறினார். தீர்ப்பில் உள்ள மாத பங்கீட்டின்படி ஒவ்வொரு மாதமும் தண்ணீர் திறந்து விட ஆணையம் கறாராக பின்பற்றிட வலியுறுத்தினோம்.

மேலும் மேகதாது அணையை கட்டிட அனுமதி அளிக்கக்கூடாது என நாங்கள் வலியுறுத்திய போது, இப்போது அது ஆய்வில் எங்களிடம் இல்லை என்று தலைவர் கூறினார். 5லட்சம் ஏக்கர் குறுவை நெல் சாகுபடி அழிந்தால் கர்நாடகாதான் பொறுப்பாகும் என்பதை அறிந்து, ஆணையம் நியாயமாக கூட்டம் நடத்தி இதை உறுதிப்படுத்திட கூறினோம். சுமார் ஒரு மணி நேரம்நடந்த உரையாடலில் ஆர்வத்துடன் ஆணையதலைவர், செயலர் மற்றும் உறுப்பினர்கள் பங்கு கொண்டனர்.

### இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர்
# வை.சிவபுண்ணியம் 6 வழக்குகளில் விடுதலை

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் வை. சிவபுண்ணியம் (மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர்) இவர், கட்சியின் திருவாரூர் மாவட்டச் செயலாளர் பொறுப்பில் இருந்த போது 2018 நவம்பர் மாதத்தில் கஜா புயல் பாதிப்பு ஏற்பட்டது.

கடுமையான சேதாரத்தை ஏற்படுத்திய கஜா புயல் இயற்கை பேரிடர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நிவாரணம் கேட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, தஞ்சாவூர், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் தொடர்ந்து போராட்டங்களை மேற்கொண்டது.

அப்போது ஆட்சியில் இருந்த அஇஅதிமுக முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அரசு போராடியவர்கள் மீது தாக்குதல் நடத்தி வழக்கும் போட்டது.

போராட்டத்தில் முனைப்புக் காட்டிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்டச் செயலாளர் தோழர் வை. சிவபுண்ணியம் மீது ஒரே நாளில் காவல் துறை பல்வேறு பகுதிகளில் 49 வழக்கு போட்டது.

அஇஅதிமுக அரசின் பழிவாங்கல் நடவடிக்கையால் சோர்ந்து போகாத வை. சிவாண்ணியம் தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்ததால் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைத்தது.

எடப்பாடி அரசு போட்ட அரசியல் பழிவாங்கும் வழக்குகளில் 40 வழக்குகள் தற்போதைய அரசால் தள்ளுபடி செய்யப்பட்டது.

தற்போது ஆறு வழக்குகளில் இருந்து நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இன்றும் மூன்று வழக்குகள் விசாரணையில் உள்ளன.

# சேலம் டிஸ்ட்ரிக்ட் லோடிங் அண்ட் லோடிங் ஓர்க்கர்ஸ் யூனியன் 34ஆம் ஆண்டு பேரவை கூட்டம்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் சேலம் டிஸ்ட்ரிக்ட் லோடிங் அண்ட் லோடிங் ஓர்க்கர்ஸ் யூனியன் 34ஆம் ஆண்டு பேரவை கூட்டம் ஏ. ஐ. டி. யு. சி மாவட்ட தலைவர் எஸ். ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக ஏஐடியுசி மாநில செயலாளர் எஸ். சின்னச்சாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி. தனசேகரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே. அன்புமணி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ். ராமகிருஷ்ணன், வி. தொ. ச. மாவட்ட செயலாளர் சி. ஜெயராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு 3 ஆண்டுக்கு ஒரு முறை கூலி உயர்வு ஒப்பந்தம் சைசிங் மில் உரிமையாளர்கள் மூலம் போடும் ஒப்பந்தம் கடந்த 29.06.2023 அன்று சைசிங் உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் இடையே ஏற்பட்ட கூலி உயர்வு ஒப்பந்தத்தினை இப்பேரவை ஏற்றுக்கொண்டு ஏக மனதாக அங்கீகரிக்கிறது.

# நீர்வழி ஆக்கிரமிப்புகளை அகற்ற வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்




கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் ஒன்றியம் நரசிபுரம் பச்சாவயல் நீர் வழி ஆக்கிரமிப்புகளை அகற்றி நீர்வழி பாதையை சரி செய்ய வேண்டும்.

வினோபாஜி அறக்கட்டளை நிலங்களை கையகப்படுத்தி, ஏழை விவசாயிகளுக்கு தலா இரண்டு ஏக்கர் வீதம் வழங்க வேண்டும்.

அரசு புறம்போக்கு நிலங்களை மீட்டு வீடு இல்லா ஏழைகளுக்கு வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோவையை அடுத்த பேரூர் தாலுகா அலுவலகம் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தொண்டாமுத்தூர் ஒன்றிய துணை செயலாளர் வி.பி. ராமசாமி தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கே.எம். செல்வராஜ், தொண்டாமுத்தூர் ஒன்றிய செயலாளர் எம்.கணேசமூர்த்தி, மாவட்ட குழு உறுப்பினர் எம்.நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி

கோவை, சூலூர் தெற்கு வட்டாரம், கண்ணம்பாளையம் தெற்கு கிளை துணை செயலாளர் எஸ். யேசுராஜ் லட்சுமி ஆகியோரது மகள் நிர்மலா ஜெ. வசந்தகுமார் ஆகியோரது மணவிழா 2452023 அன்று நடைபெற்றது. ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ 1000, கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ப. மௌனசாமி அவர்களிடம் வழங்கப்பட்டது. வாழ்க மணமக்கள்.

# ஆளுநரை திரும்பப்பெற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு அரசாங்கத்திற்கு எதிராக தொடர்ந்து செயல்படும் கவர்னர் ரவியை ஒன்றிய அரசு திரும்ப பெற வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை மாவட்ட துணை செயலாளர் சி. தாமஸ், மாநில குழு உறுப்பினரும், மாதர் சங்க மாவட்ட செயலாளருமான பா. ராஜலெட்சுமி, மதுரை மாவட்ட ஏஐடியூசி தலைவர் எம். நந்தாசிங், இளைஞர் பெருமன்றத்தின் பழனிமுருகன், அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழக மாவட்ட செயலாளர் உசிலை ஜீவா, தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட சங்கத்தின் மாநில பொருளாளர் இரா.மு ருகன் உட்பட கட்சி தோழர்கள் பெருமளவில் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

# 11ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

11ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, 2023 சூலைத் திங்கள் 0709 ஆகிய நாள்களில் சென்னையில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கருத்தரங்கில் "கொளற்குஉரி மரபும் கொடைக்குஉரி மரபும் : சங்க காலக் காதல் உறவுகளை மறுத்த மாற்றிய உடைமை அமைப்பின் வேண்டல்கள்" என்னும் தலைப்பில் டாக்டர் மே.து. ராசுகுமார் ஆய்வுக் கட்டுரை வழங்கினார்.

"பெண் வழிமுறை அமைப்பில் ஆடவருக்கு முன்னர் பொருளியச் செயல்பாடுகளை முன்னெடுத்த சங்க கால மகளிர்" என்னும் தலைப்பில் வசந்தா ராசுகுமார் ஆய்வு கட்டுரை ஒன்றை வழங்கினார்.

# ஏஐடியுசி தேசிய நிர்வாகக்குழு கூட்டம்

ஏஐடியுசி தேசிய நிர்வாகக்குழு கூட்டம். நியூ டெல்லி, ஏஐடியுசி பவனில் ரமேந்திர குமார், பினாய் விஸ்வம் எம். பி., பன்சிங் பரார் தலைமையில் நடைபெற்றது. பொதுச்செயலாளர் அமர்ஜித் கவுர் அறிக்கைகளை முன் வைத்தார். விவாதத்தில் தமிழ்நாடு சார்பில் எஸ். காசி விஸ்வநாதன் மற்றும் மாநிலங்களில் இருந்து தோழர்கள் பங்கேற்றனர். தேசிய செயலாளர்கள் டி. எம்.மூர்த்தி, ஸ்ரீகுமார், ஏ. ஐ. பி. இ. ஏ. பொதுச்செயலாளர் சி. எச். வெங்கடாசலம், மாநில பொதுச்செயலாளர் ம. இராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

திருப்பூரில் செப்டம்பரில் நடைபெற உள்ள பொதுக்குழு கூட்டம் ஏற்பாடுகள் குறித்து வஹிதா நிஜாம் விளக்கினார்.

### நிரந்தர இடத்தில் பி–6 காவல் நிலையம்
# இளைஞர் பெருமன்றம் கையெழுத்து இயக்கம்

வடசென்னை மாவட்டம் ஆர்.கே.நகர் பகுதி 38,41,47 ஆகிய வட்டங்களை உள்ளடக்கிய பகுதியில் லட்சக்கணக்கான மக்கள் வசிக்கின்றனர். இந்த பகுதிக்காக இருப்பது ஹெச் 6 காவல் நிலையம், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக வாடகை கட்டிடத்தில் முறையான வசதிகளின்றி இயங்கி வருகிறது.

எனவே ஹெச் 6 பொது மக்கள் நலன் கருதி காவல் நிலையத்தை மேற்கூறிய சுண்ணாம்பு கால்வாய் அருகில் அமைத்து தர, தமிழ்நாடு அரசையும், காவல் துறையையும் வலியுறுத்தி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் வடசென்னை மாவட்டம் சார்பாக மாவட்ட செயலாளர் ஆ. சுரேஷ் தலைமையில் கையெழுத்து இயக்கம் கொருக்குப்பேட்டை கே. என். எஸ். டிப்போ அருகில் நடைபெற்றது.

இந்த கையெழுத்து இயக்கத்தை அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநில தலைவர் த. கு. வெங்கடேஷ் வேம்புலி துவக்கி வைத்தார்.இந்த கையெழுத்து இயக்கம் இயக்கம் தொடர்ச்சியாக ஒரு வார காலம் நடைபெற உள்ளது.

பெறப்படும் கையெழுத்து படிவங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், காவல் ஆணையாளர் அவர்களுக்கும் கொடுக்க இருக்கின்றார்கள்.



டி.எம்.மூர்த்தி

**இந்தியாவிலேயே முதல் முறையாக, ஆன்லைன் வழியாக உணவு, மளிகை, எலக்ட்ரானிக் மற்றும் இதர பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு கொண்டு தருகிற, செயலிகள் வழியாக மேற்கொள்ளப்படும் இதர சேவைத் துறைகளில் பணிபுரிகிற தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புச் சட்டம் ஒன்றை ராஜஸ்தான் மாநில அரசு நிறைவேற்றி இருக்கிறது.**

# ராஜஸ்தான் மாநிலத்தில் ‘ஜிக்’ தொழிலாளர்களுக்கான முதல் சட்டம்!



இந்தச்சட்டத்திற்குராஜஸ்தான்மின்னணு செயலி சார்ந்த ‘ஜிக்‘ தொழிலாளர்கள் பதிவு மற்றும் நல சட்டம் The Rajasthan Platform Based GIG Workers (Registration and Welfare) Act 2023 என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இது 21.07.2023ம் தேதியன்று ராஜஸ்தான் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

விற்பனை செய்பவருக்கும், வாங்குபவருக்கும் இடையில், ஆன்லைன் வழியாக தொடர்பு ஏற்படுத்தி வழங்கப்படும் பணிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு சட்டம் ஆகும்.

கணினி, திறன் பேசிகளில் உள்ள செயலிகள் (app) வழியாக வழங்கப்படுகிற, ஊபர், ஓலா போன்ற டாக்ஸி உள்ளிட்ட போக்குவரத்து சேவைகள், அமேசான், ஜொமாட்டோ, சுவிக்கி, ஃபிலிப்கார்ட் போன்ற உணவுப் பொருள் அல்லது மளிகை, எலக்ட்ரானிக் பொருட்கள் உள்ளிட்டவற்றை வீடுகளுக்குக் கொண்டுதரும் சேவைகள், சுமைகளை இடம்மாற்றித் தருகிற சேவைகள், எலக்ட்ரானிக் சந்தை வழியாக மேற்கொள்ளப்படும் பணிகள், தொழில் சார்ந்த வேலைகளுக்கு ஆட்களை அனுப்புகிற பணிகள், உடல் நலம், பயணம் மற்றும் விருந்தோம்பல், ஊடக சேவைகள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இந்த சட்டம் பொருந்தும்.

இவர்கள் ‘ஜிக்’ (gig) தொழிலாளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். (இதற்குப் பொருத்தமான தமிழ்ப் பெயரை கண்டறிய வேண்டும்)

இவர்களுக்கான சமூக பாதுகாப்பு வாரியம் ஒன்று அமைக்கப்படுகிறது. மாநில தொழிலாளர் அமைச்சர் இதன் தலைவர் ஆவார். தொழிலாளர் துறை, தகவல் தொழில்நுட்பத் துறை, சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை, போக்குவரத்து துறை ஆகியவற்றின் அரசு செயலாளர்கள், ஜிக் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஐவர், இந்த தொழிலில் உள்ள உற்பத்தியாளர்கள் சேவை வழங்குபவர்கள், முதன்மை வேலை அளிப்பவர்கள் ஆகியவர்களின் பிரதிநிதிகள் ஐவர், குடிமைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர், இதன் மீது அக்கறை கொண்ட வேறு களத்தைச் சேர்ந்த ஒருவர் ஆகியோர் இந்த வாரியத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இந்த செயலிகள் மூலம் ஆர்டர் எடுத்து, ஆட்கள் வழியாக பொருள்களை கொண்டு சேர்ப்பவர் தொகுத்து வழங்குபவர் (அக்ரிகேட்டர்) என்று அழைக்கப்படுகிறார்.

அதேபோல இந்த செயலிகள் வழியாக தமது உற்பத்தி பொருட்களை விற்பனைக்கு தருகிற உற்பத்தியாளர்கள் முதன்மை வேலை அளிப்பவர் எனப்படுகிறார்.

இவர்கள் இந்தச் சட்டம் வந்த 60 நாட்களுக்குள் தம்மை வாரியத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்த நிறுவனங்களின் பெயர்கள் அடங்கிய பதிவேட்டை வாரியம் வைத்திருக்கும்.

இந்த முதன்மை வேலைவாய்ப்பு வேலை அளிப்பவரும், தொகுத்து வழங்குபவரும், தாம் வழங்கும் சேவைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பெயர்ப் பட்டியலை இந்த சட்டம் வந்த அறுபது நாட்களுக்குள் தர வேண்டும்.

இந்த தொழிலாளர்கள், அந்த வேலையளிப்பவரிடம் எவ்வளவு காலம் வேலை பார்க்கிறார்கள் அல்லது எத்தனை மணி நேரம் ஒரு நாளில் வேலை பார்க்கிறார்கள் என்ற அளவீடுகள் எதுவும் கிடையாது

இந்த பட்டியலில் உள்ள தொழிலாளர்கள், தாமாகவே வாரிய உறுப்பினர்களாகி விடுவார்கள். தம்மை பதிவு செய்து கொள்வதற்காக தனியாக விண்ணப்பிக்கத் தேவையில்லை.

இவர்களுக்கான நிதி பலன்களை வழங்குவதற்காக சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதி ஒன்றை வாரியம் கையாளும்.

இதற்கான நிதி திரட்டுவதற்காக, நல வரி (Cess) சட்டம் உள்ளது. இந்த சேவைகளை வழங்குவதற்காக, மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பணப் பரிவர்த்தனையின் (transaction) போதும், அந்தத் தொகையில் ஒரு சதத்துக்குக் குறையாமலும், இரண்டு சதத்துக்கு மிகாமலும் ஒரு தொகையை அரசு நிர்ணயிக்கும்.

இந்தத் தொகையை ஒவ்வொரு மாதத்திலும் ஐந்தாம் தேதிக்குள்ளாக அந்த நிறுவனம் அரசுக்கு செலுத்தியாக வேண்டும். செலுத்தத் தவறினால், நில வருவாய்ச் சட்டப்படி உரியவர்களிடமிருந்து அந்தத் தொகையை வசூலிக்கும் அதிகாரம் அரசுக்கு உள்ளது.

இதில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான ஒருங்கிணைந்த அடையாள அட்டையை வாரியம் வழங்கும். ஒன்றுக்கு மேற்பட்ட தொகுத்து வழங்குபவரிடம் பணிபுரிந்தாலும் இந்த ஒரே அடையாள அட்டை போதுமானது.

உடல் உழைப்பு தொழிலாளர் நல வாரியம் போன்றதாக இது அமைந்திருப்பினும், தமது பணியில் ஏற்படும் பிரச்சனைகள், ஊதியம், இதர நலன்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் வழங்காவிட்டால், வாரியத்திடம் தொழிலாளி புகார் அளிக்க முடியும்.

அந்தப் புகார் மனுவை விசாரிக்க அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். அந்த புகார் மனுவை விசாரித்து, தொழிலாளிக்கு தரவேண்டிய தொகை மற்றும் இழப்பீட்டை வழங்குமாறு, அந்த அதிகாரி சட்டப்படியான தீர்ப்பு வழங்க முடியும். இந்தத் தீர்ப்பில் இசைவு இல்லாவிட்டால், இரு தரப்பில் யார் ஒருவரும் மேல் முறையீடு செய்து கொள்ளலாம். மேல்முறையீட்டுக்கும் அதிகாரிகள் நியமிக்கப் படுகிறார்கள்.

இந்தச் சட்ட விதிமுறைகளுக்கு விரோதமாக நடந்து கொள்ளும் முதன்மை வேலை அளிப்பவர் அல்லது தொகுத்து வழங்குபவர் ஆகியோருக்கு முதல் தவறுக்கு ரூபாய் பத்தாயிரம் வரையிலும் தொடர்ந்து தவறு இழைப்பவர்களுக்கு 2 லட்சம் ரூபாய் வரையிலும் அபராதம் விதிக்க இந்த சட்டம் வழிவகை செய்கிறது.

ஏற்கனவே தமிழ்நாட்டில் இந்த தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தைநிர்ணயம் செய்வது சம்பந்தமாக குறைந்தபட்ச ஊதிய மாநில ஆலோசனை வாரியத்தில் விவாதிக்கப்பட்டது. எனினும் முதலாளி தொழிலாளி உறவு நிலை குறித்த சட்ட ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலும் இதுபோன்ற சட்டத்தை உருவாக்குவதற்கு தொழிற்சங்கம் முயற்சி எடுக்க வேண்டும். இந்த தொழிலாளர்களை தொழிற்சங்கமாக அணி திரட்டுவதற்கான பணி தாமதம் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

# துணி, நூல், ஆடைத் தொழிலை பாதுகாக்க அவசர நடவடிக்கை தேவை!

**கே சுப்பராயன் எம்.பி.**
**ஒன்றிய அரசுக்குக் கடிதம்!**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மக்களவை உறுப்பினர் கே சுப்பராயன், துணி, நூல், ஆடைகள் துறையில் ஏற்பட்டுள்ள கடும் சிக்கல்களை தீர்வு செய்ய, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு கோரி துணி நூல் துறை அமைச்சர் பியூஸ் கோயலுக்கு எழுதியுள்ள கடிதம் பின் வருமாறு:

வணக்கம். இந்தியாவின் துணி, நூல், ஆடை உற்பத்தித் துறை வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத கடுமையான நெருக்கடிக்கு தற்போது ஆட்பட்டுள்ளது. விவசாயத்துக்கு அடுத்தபடியாக மிக அதிகமானவர்களுக்கு வேலை வழங்கும் துறை இதுவாகும். 4 கோடியே 50 லட்சம் பேருக்கு நேரடியாகவும், 6 கோடிக்கு மேற்பட்டவர்களுக்கு மறைமுகமாகவும் இத்தொழில் வேலை அளிக்கிறது என்று ஒன்றிய அரசின் துணி நூல் துறையே கூறி இருக்கிறது. எனவே இந்த சிக்கல் இந்த துறைகளை பாதிப்பது மட்டுமின்றி, கோடிக்கணக்கான மக்களின் சமூக பொருளாதாரத்தைச் சீரழித்து விடும்.

2014ம் ஆண்டிலிருந்து இந்த தொழிலில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. ஆடைத் தயாரிப்பு தொழில் பெரும் பின்னடைவுக்கு ஆளானது. உலகச் சந்தையில் இந்திய ஜவுளி மற்றும் ஆடைகளின் பங்கு குறைந்து கொண்டே இருக்கிறது. இதற்கு அரசாங்கத்தின் அலட்சியமும் தவறான கொள்கைகளுமே காரணமாகும். பண மதிப்பிழப்பு, ஜிஎஸ்டி வரி, உயர்ந்து கொண்டே இருக்கும் மின்சாரக் கட்டணம், ஏறிச் செல்லும் பருத்தி மற்றும் பாலியஸ்டர் நூலின் விலை போன்றவை இத்தொழிலை சிதைத்துக் கொண்டுள்ளன.



பருத்தி மீது விதிக்கப்பட்ட 11 சதவீத இறக்குமதி வரி சர்வதேச சந்தையில் சமமற்ற போட்டியை உருவாக்கி விட்டது. பாலியஸ்டர், செயற்கை இழைகள் ஆகியவை மீதான அரசின் கொள்கையும் நெருக்கடியை அதிகப்படுத்தின. ரஷ்ய உக்ரைன் போர், சர்வதேச நிதிச் சிக்கல், பணவீக்கம், மிகவும் பணத்தேவை மிகுந்த நிலையில் பஞ்சாலைகளுக்கு புதிய கடன்களை வழங்க வங்கிகள் மறுப்பது போன்றவை, ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட இந்தத் தொழிலை அழித்து வருகின்றன.

என்டிசி மில்களுக்கு நிதி வழங்கி பருத்தி நூல் உற்பத்தியை அதிகரிப்பது அவசியமானதாகும். என்டிசி ஆலைகள் தற்போது மூடப்பட்டுள்ளன. அவற்றை இயக்குவதற்கான செயல்பாட்டு மூலதனம் இல்லை என்று அரசாங்கம் கூறுவது ஏற்கத்தக்கதல்ல. அவை பொதுத்துறை ஆலைகள். கூடுதல் முதலீடு செய்வதன் மூலமாக அவற்றை நன்கு லாபகரமாக இயக்க முடியும்.

உலக சராசரிக்கு சமமாக இந்தியாவில் பருத்தி உற்பத்தி இருக்கும் நிலையிலும், நூல் விலை ஏற்றத்தின் காரணமாக இந்திய பஞ்சாலைத் தொழில் பாதிக்கப்படுவது முரண்பாடு உள்ளதாகும். என்டிசி ஆலைகளை முழு திறன் அளவுக்கு இயக்குவதன் மூலம், இந்தியாவில் உற்பத்தியாகும் பருத்தி மூலம் தரமான நூலை உற்பத்தி செய்ய முடியும். இது பருத்தி சாகுபடியையும் மேம்படுத்த உதவும்.

உலகச் சந்தையில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை இறக்குமதி வரி கடுமையாக பாதிப்பதால். பருத்தி மீதான 11% இறக்குமதி வரியை ரத்து செய்ய வேண்டும். ஏற்கனவே பெருந்தொற்று காலத்தில் கடன் தவணைகளை மூன்றாண்டு நீடித்தது போன்று, இன்னும் கூடுதலாக மூன்று ஆண்டுகள் அதிகப்படுத்த வேண்டும். முதன்மைத் தொகையை திருப்பிச் செலுத்த ஓராண்டு தவணை நீட்டிக்கப்பட வேண்டும். நிதிச் சிக்கலைத் தீர்வு செய்ய புதிய கடன் வசதி வழங்க வேண்டும்.

வங்கிகளில் உதவி கிடைக்கப்பெற்று இத்தொழிலை பின்னடைவிலிருந்து மீட்டு, புத்துயிரூட்டி மீண்டும் பழைய வளமான நிலையை அடைய, பொருத்தமான அவசியமான கொள்கை மாற்றங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

ஆகவே துணி, நூல், ஆடை உற்பத்தி தொழிலில் உள்ள உற்பத்தியாளர் அமைப்புகளோடு கலந்துரையாடல் செய்து, தேவையான நடவடிக்கைகளை எடுத்து துணி, நூல், ஆடைத் தொழிலைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கலை இலக்கியப் பூங்கா

**புதுமுக இயக்குனர் வினாயக் சந்திரசேகர் இயக்கி உள்ளார். ஆணாதிக்க, நிலப்பிரபுத்துவ விழுமியங்களுக்கு எதிரான பல நுட்பமான காட்சிகளை கதையின் போக்கிலேயே சொல்லாமல் சொல்கிறார்.**

# குட் நைட்
## திரை விமர்சனம்

**குறட்டை என்பது வெளிநாடுகளில் விவாகரத்துக்கு ஒரு காரணமாக உள்ளது. ஆனால் 'குட்நைட்' படத்தில், தம்பதிகள் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பால், குறட்டையை எப்படி எதிர்கொள்கிறார்கள், அதனால் வரும் சிக்கல் என்ன என்பதுதான் கதை. இது ஒரு மலையாள திரைப்படம் போல உள்ளது.**

ஜெய்பீம் படத்தில் ராஜாகண்ணு வேடத்தில், அப்பாவியாக நடித்த, மணிகண்டன்தான் 'குட்நைட்' படத்தின் கதாநாயகன் மோகன். இவன் தகவல் தொழில்நுட்பத்துறையில் பணிபுரிகிறான். வளர்ந்து வரும் சாதாரண குடும்பம். தூங்கும்போது குறட்டை விடுவதால், நண்பர்களின் ஏளனத்திற்கு ஆளாகி 'மோட்டார்' மோகன் என்ற அடைமொழியைப் பெற்றவன். குறட்டை சத்தத்தாலேயே, இவனது காதல் தோல்வி அடைகிறது. மனரீதியில் கழிவிரக்கம் கொள்கிறான். திருமணம் ஆகுமா, அப்படி நடந்தால் என்னவாகுமோ என சஞ்சலம் கொள்கிறான். கதையின் முற்பாதி கலகலப்பாகவும், நகைச்சுவையாகவும் செல்கிறது. காதல், கோபம், நிராசை என அத்தனை உணர்வுகளையும் அனாயசமாக காட்டுகிறார் மணிகண்டன்.

'கடைசி விவசாயி' படத்தில் நீதிபதியாக நடித்த ரேச்சல் ரெபாக்கா, இதில் மணிகண்டனுடைய அக்கா, 'மகா'வாக நடிக்கிறார். இவளின் கணவன் ரமேஷ் திலக் (சூது கவ்வும் படத்தில் நடித்தவர்) வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்கிறார். (இதனை ஏளனம் செய்வது போல, ஒரு இடம் கூட வரவில்லை என்பது ஒரு செய்தி). மாமன் மச்சானாக ரமேஷும், மோகனும் லூட்டி அடிக்கிறார்கள். சரக்கு அடிக்கிறார்கள். காதலுக்கும், திருமணத்திற்கும் திட்டம் போடுகிறார்கள். மகிழ்ச்சியையும், வேதனையையும் பகிர்ந்து கொள்கிறார்கள். இப்படி ஒரு மச்சான் இருக்கும்போது எப்படி திருமணம் நடக்காமல் இருக்கும். அப்படி நடந்தால் அவர்களுக்குள் எப்படி பிரிவு வரும்?

இப்படிப்பட்ட கூட்டுக்குடும்ப பின்னணியில் வளர்ந்த மோகன், தனியாக வாழும் அனுவை சந்திக்கிறான். இயல்பாக காதல் வருகிறது. ஆசை மச்சான் ரமேஷும், அவனுக்கேற்ற அக்கா மகாவும் இருக்கையில், அம்மாவை இணங்கச் செய்வதில் சிக்கல் ஏதும் இல்லை. ஆனால் குறட்டை...

கதாநாயகியாக அனு என்ற பாத்திரத்தில் நடித்திருக்கும், மீதா ரகுநாத்திற்கு அப்பாவியான முகம். நடிப்பது போலவே தெரியவில்லை. அப்பா, அம்மா இல்லாத நிலையில் தனியாக வாழும் அனுவினுடைய ஹவுஸ் ஓனர், பாலாஜி சக்திவேல் (இயக்குநர்) தம்பதியினர். அனாதையான அனுவின் நல்வாழ்க்கைக்கு முயற்சி எடுக்கிறார்கள். ஒருவகையில் திருமணம் முடிகிறது. குறட்டையை வென்றார்களா, பிரிந்து சென்றார்களா என்பதுதான் கதை.




இந்தப் படத்தை வினாயக் சந்திரசேகர் என்பவர் இயக்கி உள்ளார். இது இவருக்கு முதல் படம். ஆணாதிக்க, நிலப்பிரபுத்துவ விழுமியங்களுக்கு எதிரான பல நுட்பமான காட்சிகளை கதையின் போக்கிலேயே சொல்லாமல் சொல்கிறார். எண்பதுகளில் கோலோச்சிய நடிகர் 'மைக்' மோகன் மீதுள்ள காதலால்தான், மாமியார் தன் மகனுக்கு மோகன் எனப் பெயர் வைத்ததை, எல்லார் முன்னிலையிலும், மாப்பிள்ளை ரமேஷ் கிண்டல் செய்கிறான்; எல்லாரும் தொலைக்காட்சியில் மோகன் பாடும் பாடலை ரசிக்கிறார்கள். ரமேஷ் மகா தம்பதியினரின் திருமண வாழ்க்கை தனித் தடத்தில் போகிறது. ரமேஷிற்கு மாமியாரிடம் எந்தவிதமான மருமகன் பந்தாவும் இல்லாமல், இயல்பாக பழக முடிகிறது.

ஒரு நாத்தனார் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக மகா இருக்கிறார். வீட்டிலேயே, அவன் மனைவிக்கு பிடித்ததை சமைத்துக் கொடு என தன் தம்பிக்கு அறிவுறுத்துகிறாள். அவளுக்கு நூடுல்ஸ் பிடிக்கலாம் என மச்சான் ரமேஷ் சொன்னதை நம்பி சமைத்து தருகிறான். அவன் மனம் கோணுமே என எண்ணி, அவள் தனக்குப் பிடிக்கவில்லை என்றாலும் சாப்பிட்டுவிட்டு வாந்தி எடுக்கிறாள். இப்படி ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அன்பே, ஒருவரை ஒருவர் சரியாக புரிந்துகொள்வதில் தடையாகிறது. திரைக்கதையை கச்சிதமாக அமைத்துள்ளனர். இவர்கள் அடிக்கும் லூட்டிக்கு ஏற்றவகையில் படத்தின் இசையும் இருக்கிறது. கதையின் இரண்டாம் பாதி சற்று தொய்வாகச் செல்கிறது. ஒரே மாதிரியான சம்பவங்கள் மீண்டும், மீண்டும் வருகின்றன.

இந்தப் படத்தில் வில்லன் என்று யாரும் இல்லை. ரமேஷ் மகாவிற்கு திருமணம் நடந்து ஐந்து ஆண்டுகளானாலும் குழந்தையில்லை. அவர்கள் ஒருவரை ஒருவர் மற்றவர் முன்னிலையில் தயக்கமின்றி கொஞ்சிக்கொள்ளும் காட்சிகள் இதுவரை தமிழ் படத்தில் யாரும் பார்க்காதவை. அவர்களுக்கு குழந்தை இல்லை என்பது அவர்கள் பிரச்சினை. அவர்களுக்கு மற்றவர்கள் ஏன் 'ஆலோசனை' வழங்க வேண்டும். பாலாஜி சக்திவேல் தம்பதியினருக்கும்தான் யாருமில்லை. அவர்கள் மகாவின் வளைகாப்பிற்கு உள்ளார்ந்த அன்போடு வருகிறார்கள். அனுவைதனது மகளாக பாவிக்கிறார்கள்.

சாலையோரத்தில், ஒரு நாய்க்குட்டியைக் கண்டு, அனு அதனிடம் அன்புகாட்டுகிறாள். அது இவள் வீட்டிற்கு வருகிறது. இதுவே மோகன் அனுவைப் பார்க்கவும், பழகவும், காதலிக்கவும் காரணமாக அமைகிறது.

ஹாட் ஸ்டாரில் இந்தப் படத்தைப் பார்க்கலாம். இந்தக் கதை அதன் வித்தியாசமான பார்வையில், வேறுபடுகிறது. அன்பு சூழ் மனிதர்களால் நிறைந்திருக்கும் இந்த உலகம், எத்தகைய மகிழ்ச்சியைத் தரும் என்பதைக் காணும் இயக்குநரின் படைப்பு இது. தமிழுக்கு அற்புதமான இயக்குநர் ஒருவர் கிடைத்துள்ளார்.

**பீட்டர் துரைராஜ்**

# ஆளும் மண்டபத்தில் சிலை வை! நிர்வாணமாய்!

**காஞ்சனா** (AIBEA)

உற்றுப் பார், பதறி விலகாதே,
கண்ணை மூடாதே,
விரல் தேயும் வரை பதிவிடு,
இந்த தேசம் பற்றி
எரியும் வரை பதிவிடு,
அருகில் குழந்தைகள் இருந்தால்
காட்சி மாற்றாதே,
கருமையிட்டு என் உடல் மறைக்காதே.

ஆயிரம் பேருக்கு முன்
அம்மணமாய் நடந்த
என் உடல் நடுக்கம்,
உன் ஈரக் குலையை
அறுக்கும் வரை பதிவிடு

கொடி தாங்கி நின்றவள் வேண்டாம்
இனி இந்த தேசத்தின் அடையாளமாய்
நானாகிறேன்

முடிந்தால் உன் அலங்கார
ஆளும் மன்றத்தின்
மைய மண்டபத்தில்
எனக்கு ஒரு சிலை வை
நிர்வாணமாய்

ஊர்வலமாய் நான் நடந்த நாளில்
விண்ணுக்கு கோள் அனுப்பி
அண்ணாந்து பார்த்த என் தேசமே
காரி உமிழ்ந்து கொள்!

மன்னித்துவிடு!
உன் முகத்தில் பட்ட எச்சில் துடைக்க
என்னிடம் துணி இல்லை!

காலம் காலமாய் உன்
ஆதிக்க அதிகார வெறி தணிக்க
என் ஆடைகள் தான்
வேண்டும் என்றால்
அந்தக் கருமத்தை
ஏவாள் காலத்திலேயே
தூக்கி எறிந்திருப்பேன்!

உன்னிடம் முண்டாசு கட்டியவனோ
வெண் தாடி கிழவனோ
இருந்தால் அவனிடம்
கொடுத்தனுப்பு எனக்கான ஆடையை!

அப்படி யாரும் இல்லை என்றால்
விட்டுவிடு!


நான் அம்மணமாய்
இருந்து விட்டுப் போகிறேன்

இந்த சமூகத்தை மாற்றும்
கரு சுமக்காத என் கருவறையும்
குப்பைக்கு இரையாகட்டும்

என் ஆடைகளை சுமந்து செல்லும்
உங்கள் நதிகள் என்றுமே
புனிதம் அடையப்போவதில்லை

சமூக அரசியல் மாற்றத்தை
கொண்டுவர முடியாத அந்நாளில்
என் தேசமே!
தலைகுனிந்து மண்டியிட்டு
என்னிடம் மன்னிப்பு கேள்!
என் இடக்கால் பெருவிரலால்
உன்னை மன்னித்துத்
தொலைக்கிறேன்.
யுகயுகமாய் மன்னித்தே
பழக்கப்பட்டு வந்திருக்கிறேன்.

*அறம் பிழைத்தவருக்கு
அறமே கூற்றாகட்டும்*



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 28.07.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## மணிப்பூர் கொடூரத்தைக் கண்டித்து

# சி.பி.ஐ., பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள் தமிழ்நாடு தழுவிய போராட்டங்கள்




இந்திய மாதர் தேசிய சம்மேளனம் (NFIW), அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் (AIYF) சார்பாக 22.07.2023 அன்று, சென்னை பனகல் மாளிகை அருகே வாயில் கருப்புத்துணி கட்டி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் ஆனி ராஜா, டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, டாக்டர் ஜி. ரவீந்திரநாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மணிப்பூர் கொடூரத்தை கண்டித்தும் இதற்குக் காரணமான பாஜக மணிப்பூர் மாநில, ஒன்றிய அரசுகளைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நாடு தழுவிய போராட்டம் ஜூலை 25 அன்று நடைபெற்றது.**




விருத்தாச்சலம் அருகில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. நல்லூர் ஒன்றியச் செயலாளர் வி.பி.முருகையன் தலைமை தாங்க, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர் சுப்பிரமணியன் உட்பட ஏராளமான தோழர்கள் ரயிலை மறித்து முழக்கமிட்டனர்.








அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பில் மணிப்பூரில் கலவரத்தை கட்டுப்படுத்த தவறிய மாநில பிஜேபி அரசு பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியும், பெண்களை நிர்வாணப்படுத்தி வீதியில் இழுத்துச் சென்ற கொடும் குற்றவாளிகள் மீது கடுமையான பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் திருவாரூர் மாவட்டம் சார்பில் திருத்துறைப்பூண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கல்லூரி கிளை நிர்வாகி மார்ட்டின் தலைமையில் கல்லூரி வாயில் முன் போராட்டம் நடைப்பெற்றது. ரோஷினி முன்னிலை வகித்தார், போராட்டத்தின் கோரிக்கையின் விளக்கி மாவட்டச் செயலாளர் ஜே.பி. வீரபாண்டியன் பேசினார். இதில் மாவட்டத் தலைவர் ஜே.பாரதிசெல்வன், மாவட்ட பொருளாளர் கா.கோபி, மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.கே. பிரசன்னா, என்.எஸ் பிரகாஷ், கல்லூரி நிர்வாகிகள் அருண்குமார், அரவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மன்னார்குடி

மன்னார்குடி அரசு கல்லூரியில் மாவட்டத் துணைச் செயலாளர் வி. கனகராஜன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட பொருளாளர் க. கோபி, மாவட்ட குழு உறுப்பினர் பிரேம்குமார்,மாறன், அபிரன், ஹரிஹரசுதன், சினேகிதன்,திவ்யா, கபில்ராஜ் உள்ளிட்ட கலந்து கொண்டனர்.

### சேலம்

சேலத்தில் மாவட்ட செயலாளர் பா.நேதாஜி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் பா.தினேஷ், மாவட்டத் தலைவர் கே.எஸ். தீனதயாளன், ஒடுக்கப்பட்ட வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் ஜெ.கணியன் பூங்குன்றன், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் ஏ.கரன் டி.சந்துரு, ஏ.கலைவாணன், வி.சண்முகபாண்டியன், சூர்யா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கோவை சட்டக் கல்லூரி

கோவை சட்டக் கல்லூரியில் மாநிலத் துணைத் தலைவர் பா.சினேகா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட சட்டக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் கலைக் கல்லூரியில் ஸ்ரீஹரி தலைமையில் நாள் முழுவதும் வகுப்புகளை புறக்கணித்து போராட்டம் நடைபெற்றது.

### கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் இளைஞர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் க.பாரதி கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். மாவட்ட நிர்வாகிகள் விஜய், கணேசன், ராமன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

### மதுரை

மதுரை மாவட்டம் மேலூர் அரசு கலைக் கல்லூரியில் ஜெகன் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. இதில் இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் கிரிஷ், பாக்கியம், மாணவர் பெருமன்ற மாநில குழு உறுப்பினர் சேது பாண்டி உள்பட 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### நந்தனம் கலைக் கல்லூரி

தென் சென்னை மாவட்டம் நந்தனம் கலைக் கல்லூரியில் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் மாவட்ட செயலாளர் மணிகண்டன் கலந்து கொண்டு கோரிக்கை உரை நிகழ்த்தினார். இதில் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### வடசென்னை

வடசென்னை மாவட்டம் வியாசர்பாடி அம்பேத்கர் கலை கல்லூரி முன்பு இளைஞர் பெருமன்றம், மாணவர் பெருமன்றம் இணைந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில துணைச் செயலாளர் இரா.ராமசாமி, மாவட்ட செயலாளர் வசந்தபாரதி உட்பட கலர் கலந்து கொண்டனர்.

### இராமநாதபுரம்

இராமநாதபுரம் மாவட்ட அரசு சேதுபதி கலைக்கல்லூரியில் மாணவர் பெருமன்ற தலைவர் வேல்முருகன் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. இதில் மாணவ, மாணவிகள் 800 மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து கண்டன முழக்கங்களை சைலேந்திரபாபு எழுப்பினார். மாணவர்கள் மத்தியில் பா.சண்முகராஜன் உரையாற்றினார்.

### திருச்சி

திருச்சியில் இந்திய மாதர் தேசிய சம்மேளனம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாதர் சங்க நிர்வாகிகள் க.ஆயிஷா, அஞ்சுகம், பார்வதி மற்றும் மாணவர் பெருமன்ற மாநிலப் பொருளாளர் க.இப்ராகிம், இளைஞர் பெருமன்றம் நிர்வாகிகள் ஹாஜா, தர்மா உள்ளிட்டர் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை

மயிலாடுதுறை பேராயர் தரங்கை பேராயர் மாணிக்கம் லுத்தரன் கல்லூரியில் கிளை தலைவர் ராகுல் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட பொறுப்பாளர் பகத்சிங், நிர்வாகிகள் கவி, ஜீவரசி, அக்ஷயா, அலெக்ஸ் பாண்டியன், திவாகர், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.






Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: K.Subbarayan .,
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.